# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| | | | | |
|---|---|---|---|---|
| மலர்–17, இதழ் – 4<br>Volume - 17, Issue - 4 | பங்குனி திங்கள்<br>March 2026 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |




THE KNEE INSTITUTE
RESTORING MOVEMENT
By
Parvathy Hospitals



# சிகிச்சைக்குப் பிறகும் முழங்கால் வலி கவலையா?

"என் முழங்கால் இப்போது முன்பு போல் நன்றாக உள்ளது."

கவலை வேண்டாம்...
வலி இனி இல்லை!

## KINEMATICALLY ALIGNED KNEE REPLACEMENT

மூலம் சிறந்த தீர்வு.

- அதே நாளில் டிஸ்சார்ஜ்
- அறுவை சிகிச்சைக்குப் பின் (பிசியோதெரபி) தேவையில்லை

### எங்கள் சிகிச்சையின் சிறப்புகள்

- சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற அறுவை சிகிச்சை மருத்துவர்கள்
- அடுத்த நாளிலிருந்து குளிக்கலாம் – இயல்பான வாழ்க்கை தொடரலாம்
- குறைந்த வலி – சிறந்த சிகிச்சை முறை
- ஸ்டேபிள்ஸ் / தையல் அகற்றம் இல்லாத சிகிச்சை

**எங்களிடம் சிகிச்சை பெறும் நோயாளர்களில் 95% பேர் 10 முதல் 30 மணி நேரத்திற்குள் நலம் பெற்று வீடு திரும்புகின்றனர்.**

மேலும் தகவல்களுக்கு: பார்வதி ஆர்த்தோ மருத்துவமனை பிரைவேட் லிமிடெட்

தொலைபேசி: 044 2238 2248 இணையதளம்: www.parvathyhospital.com/knee-institute

241, GST சாலை (MIT மேம்பாலம் பாலம் அருகில்), குரோம்பேட்டை, சென்னை – 600044



TNRERA/29/BLG/0041/2026
DATED 10.02.2026
www.rera.tn.gov.in
CAMBRIDGE
LIVE A LONDON LIFE
BY DAC
லண்டன் நகரைத் தழுவிய கட்டிடக்கலை
நம் சென்னை மாநகரில்
சோழிங்கநல்லூர் அருகில், OMR.
2 & 3 BHK
லண்டன்-தீம் கொண்ட குடியிருப்புகள்
ஆரம்ப விலை
₹83 லட்சம்
SELLING FAST
BOOK YOURS
சிறப்பு வசதிகள்
நீச்சல் குளம் | சிறுவர் நீச்சல் குளம் | அசோசியேஷன் அறை | உள்விளையாட்டு அரங்கம் (பில்லியர்ட்ஸ், பூஸ்பால், கேரம், செஸ், ஏர் ஹாக்கி போன்றவை) | கூடைப்பந்து | ஆர்கேட்
நன்கு அமைக்கப்பட்ட உடற்பயிற்சி கூடம் | செயல்பாட்டு அறை | கோ-வொர்க்கிங் ஸ்பேஸ் | குழந்தைகள் காப்பகம் / சிறுவர் மண்டலம் | பல்நோக்கு மண்டபம்
பல்நோக்கு விளையாட்டு மைதானம் | முதியோர் ஓய்வு பகுதி | ரிஃப்ளெக்சாலஜி பாதை | வெளிப்புற இருக்கைகள் | சிறுவர் விளையாட்டு திடல் | வெளிப்புற யோகா / தியான மேடை
Scan the QR Code to Step Closer To LONDON.
Scan the QR code to experience BRITISH elegance.
Scan the QR code to Reach CAMBRIDGE by DAC
Member CREDAI
110+ PROJECTS
4.5M+ SQFT CONSTRUCTION
3000+ HAPPY FAMILIES
DAC
DREAM ASCEND CONQUER
மேலும் விவரங்களுக்கு:
93003 93003
www.dacdevelopers.com

# மணமகன் தேவை




| | |
|---|---|
| பெயர் | **செல்வி S. கீர்தனா (எ) சாய்ஶ்ரீ** |
| படிப்பு | B.Com., M.B.A., |
| பிறந்த தேதி | 11.07.1999 |
| உயரம் | 5' |
| நட்சத்திரம் | மிருகசீரிஷம் - 2 |
| கோத்திரம் | குழுவிட |
| பூர்வீகம் | மயிலாடுதுறை |
| தகப்பனார் | **S. சண்முகம்** |
| தாயார் | **S. குமுதா** (கும்பகோணம்) |
| முகவரி | Plot No. 119, Door No. 'G'<br>Sundharam Apts., 5th East Street,<br>Kamaraj Nagar,<br>Thiruvanmiyur, Chennai - 600 041.<br>Cell : 98410 77255, Whatsapp : 90800 37843<br>E-mail : challengerrealty@gmail.com |
| விருப்பம் | Equally or More qualified suitable |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி K. பிரியதர்ஷினி** |
| படிப்பு | Pharm D |
| வேலை | உதவி பேராசிரியர், மேயர் ராதாகிருஷ்ணன் காலேஜ் ஆப் பார்மசி, கடலூர்<br>Rs. 4 Lakhs / PA |
| பிறந்த தேதி | 27.07.1999 |
| உயரம் | 5' - 4" |
| நட்சத்திரம் | உத்திராடம் |
| கோத்திரம் | பாலுட |
| பூர்வீகம் | மேல்வளையமாதேவி |
| தகப்பனார் | **பா. கல்யாணசுந்தரம்,** பார்மசிஸ்ட் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சிதம்பரம் |
| தாயார் | **K. வள்ளி** (நெடுவாசல்) வள்ளி மெடிக்கல்ஸ், வளையமாதேவி |
| முகவரி | 2/226, மேல்வலையமாதேவி (PO),<br>புவனகிரி (TK) - 608 704.<br>Cell : 98423 33393, 86677 64319<br>E-mail : kalyanvalli5@gmail.com |
| விருப்பம் | நல்ல குணமுள்ள படித்து வேலையில் உள்ள வரன். |

# வாழ்க மணமக்கள்



மணமக்கள்

## அ. தரணிகுமார் - ச. நிவேதா

இவர்களின் திருமண விழா 16.02.2026, திங்கட்கிழமை வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணம் மற்றும் மயிலாடுதுறை, மகாதானத் தெரு, அபிராமி திருமண மண்டபத்தில் 17.02.2026, செவ்வாய்கிழமை நடைபெற்ற திருமண வரவேற்பிலும் கலந்து கொண்டு வாழ்த்திய அனைவருக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இரா. சங்கர்**
**ச. இராஜலெட்சுமி**



**சோ. அன்பழகன்**
**அ. இந்துமதி**

# மணமகன் / மணமகள் தேவை


| | |
|---|---|
| பெயர் | செல்வி Dr. S. பவதாரிணி |
| படிப்பு | MBBS, MS (General Surgery) |
| வேலை | Senior Resident at Private Medical College, Chennai |
| பிறந்த தேதி | 18.04.1998 |
| உயரம் | 164 cm |
| நட்சத்திரம் | பூராடம் |
| கோத்திரம் | வில்வராய |
| பூர்வீகம் | பூம்புகார் (தருமகுளம்) |
| தகப்பனார் | **S. Senthilmohan,** M.E., Civil Engineer, Business |
| தாயார் | **S. Gowri,** M.Sc., (கௌத்தூர்) |
| முகவரி | Plot No. 167, 2nd Main Road, Lakshmi Nagar Extension, Porur, Chennai - 600 116. Cell : 82208 23078, 99625 93538 E-mail : kpsmohan@gmail.com |
| விருப்பம் | சென்னையில் (Dr. or Others) பணியில் உள்ள சமமான வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **S. RAVEEN KUMAR** |
| படிப்பு | M. Tech., VLSI., |
| வேலை | Senior Lead Engineer Qualcomm, Bangalore Rs. 45 lakhs per Annum |
| பிறந்த தேதி | 21.11.1993 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | Sathayam |
| கோத்திரம் | Kanagarayar |
| பூர்வீகம் | Madurai |
| தகப்பனார் | **A. Sankar** Retd Director of School Education |
| தாயார் | **P. Vasanthi** Retd Head Mistress Govt HSS School |
| முகவரி | Plot No. 28 & 29, VGN Highness, Srinivasapuram, Iyyappanthangal, Chennai-600056. Cell : 7845914635/ 9488094635 |
| விருப்பம் | Employed or Employable Good looking girl belongs to respectable family |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் Vignesh .S |
| படிப்பு | B.Tech., M.S (USA) |
| வேலை | Software Engineer, USA (Amazon) |
| பிறந்த தேதி | 22-06-1998 |
| உயரம் | 5' - 11" |
| நட்சத்திரம் | ரோகிணி |
| கோத்திரம் | பல்லவராய |
| பூர்வீகம் | மேலையூர், பூம்புகார் |
| தகப்பனார் | **செந்திற்குமார் S.** |
| தாயார் | **மேகலா S.** (மயிலாடுதுறை) |
| முகவரி | 118, 2வது தெரு, ராம் நகர் வடக்கு விரிவு, வேளச்சேரி, சென்னை - 42. தொடர்புக்கு - திரு. திருஞானசம்பந்தம் (தலைமை ஆசிரியர் - ஓய்வு, மயிலாடுதுறை) Cell : 95008 88688, 98409 10349 (Whatsapp Messages only) |
| விருப்பம் | அமெரிக்காவில் பணிபுரியும் அல்லது படிக்கும் மற்றும் அமெரிக்க விசா உள்ள வரன்கள் மட்டும். |



# மணமகன் தேவை



| | |
|---|---|
| பெயர் | செல்வி Dr. C. ஸ்ரீரஞ்சனி |
| படிப்பு | BPT, M.Sc., Yoga, MPT (Ortho) |
| பிறந்த தேதி | 11.07.2001 |
| உயரம் | 162 cm |
| நட்சத்திரம் | பூரட்டாதி |
| கோத்திரம் | செம்புதரிய |
| பூர்வீகம் | புத்தகரம் |
| தகப்பனார் | S. சந்திரசேகரன், UCO Bank Retd. |
| தாயார் | V. ராகிணி, Govt. School (H.M.) சீர்காழி (தலச்சங்காடு) |
| முகவரி | No. 3, MR Radha Nagar,<br>Thenpathy,<br>Sirkali - 609 111.<br>Cell : 97508 89338, 90804 77415 |
| விருப்பம் | பணியில் உள்ள வரன் சமபடிப்பு (or) MBBS. |



| | |
|---|---|
| பெயர் | செல்வி Malavika Shivakumar |
| படிப்பு | Completed MBBS, Preparing for Post Graduation |
| பிறந்த தேதி | 03.05.2001 |
| உயரம் | 173 cm |
| நட்சத்திரம் | பூரம் பாதம் 3 |
| கோத்திரம் | வில்வராய |
| பூர்வீகம் | ஈரோடு |
| தகப்பனார் | Shivakumar B, Software Engineer |
| தாயார் | Kamalakumari K, Banker (திருச்சி) |
| முகவரி | 8/1, 2A Cross, 7th Main,<br>KSRTC Layout, J.P. Nagar II Phase,<br>Bangalore - 560 078.<br>Cell : 94484 69923, 73583 85455<br>E-mail : kamalishiva28@gmail.com |
| விருப்பம் | டாக்டர். செவ்வாய் தோஷம் உள்ள ஜாதகம் |
| குறிப்பு | பெண்ணுக்கு செவ்வாய் தோஷம் உண்டு |

| | |
|---|---|
| பெயர் | செல்வி Dr. P. ஹரிதா |
| படிப்பு | MBBS, MD (Paediatrics)<br>2ஆம் ஆண்டு<br>(Stanley Medical College) |
| பிறந்த தேதி | 6.11.1999 |
| உயரம் | 166 cm |
| நட்சத்திரம் | சித்திரை |
| கோத்திரம் | எரவுட |
| பூர்வீகம் | உளுத்துக்குப்பை |
| தகப்பனார் | B. பிரபாகரன், Engineer (Private Sector) |
| தாயார் | P. கவிதா, இல்லத்தரசி |
| முகவரி | Mahindra City, Chengalpattu<br>Cell : 98404 84512 |
| விருப்பம் | Studied / Studying Equivalent MD Degree In Any Branch |

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833, 9884004550**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/- மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
**89731 63434**

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
**98403 17346**

## இதழின் உள்ளே....



சங்க நிகழ்வுகள்................................................11 – 16
இந்திய வன வளம் ................................................17
சிறுவர் பகுதி ................................................27–30
மணமகன் / மணமகள் தேவை........................31–34
சங்கபலகை................................................35
விட்டலனின் ஒப்பற்ற பக்தர்................................39

**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **முனைவர் கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் S. **அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு ''கார்காத்தார் ஒப்புரவு'' நிர்வாகம் பொறுப்பேற்காது.

## ஏடு இட்டோர் இயல்.



ஒப்பற்ற ஒப்புரவு வாசகர்களுக்கு எங்களின் மனம் நிறைந்த வணக்கங்களும்! வாழ்த்துக்களும்!

101வயதானஇந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் முது பெரும் தலைவரும், சுதந்திர போராட்ட தியாகியுமான உயர்திரு. R. நல்லகண்ணு அவர்கள் பிப்ரவரி 25–ஆம் நாள், சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் வயது மூப்பின் காரணமாக காலமானார். அவரது உடல் மருத்துவ மாணவர்களின் கல்வி ஆராய்ச்சிக்காக சென்னை மருத்துவக் கல்லூரிக்கு தானமாக வழங்கப்பட்டது. அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்!

தாய்லாந்தில் நடந்த பொதுத் தேர்தலில் பிரதமர் அனுடின் சார்ன் விராகுல் தலைமையிலான பும் ஜய்தாய் கட்சி, கிளாதம் கட்சியுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. வங்க தேசத்தில் வங்கதேச தேசியவாத கட்சி (பி.என்.பி) தேர்தலில் அபார வெற்றி பெற்று, முன்னாள் பிரதமர் கலிதாஜியாவின் மகன் தாரீக் ரஹ்மான் பிரதமராகி உள்ளார். இவ்விரு அண்மை நாடுகளின் அரசுகளும் நமது பாரதத்துடன் உறவினைப் பலப்படுத்தி பிராந்தியத்தில் அமைதியை நிலை நிறுத்த உதவிபுரியுமென எதிர்பார்ப்போம்.

மதுரையில் 140 அடி உயர தியாகி வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களது சிலை நிறுவ, பிப்ரவரி 22 அன்று குடியரசுத் தலைவர் மேதகு சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் அடிக்கல் நாட்டும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அனைத்து வேளாளர் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற இவ்விழாவில், நமது மாநில கூட்டமைப்பின் தலைவர், டாக்டர் K.K.R. ராஜசுந்தரம், பொதுச் செயலாளர் திரு. கைலை. சண்முகம், பொருளாளர் திரு. ராமநாதன் பிள்ளை, அமைப்புச் செயலாளர் திருபழமலைப் பிள்ளை மற்றும் பற்பல சங்கங்களின் தலைவர்கள், செயலர்களுடன், நமது கார்குலச் சொந்தங்கள் பெருவாரியாக கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். பங்கேற்ற அனைத்து சொந்தங்களுக்கும் கார்காத்தார் ஒப்புரவின் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

பிப்ரவரி 20–ஆம் தேதி தமிழக பட்ஜெட் தாக்குதலுக்குப் பின் இந்த ஐந்தாண்டுகளுக்கான கடைசி சட்டசபைக் கூட்டம் நடந்து முடிந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் அனைத்து உறுப்பினர்களுக்கும் தனது அரசின் சார்பாக நன்றி தெரிவித்து சட்டசபைக் கூட்டத்தை முடித்து வைத்தார்.

சிறந்த குழந்தைகள் மற்றும் குடும்ப திரைப்பட பிரிவில் டைரக்டர் லட்சுமிப்பிரியாதேவி இயக்கிய "Boong" எனும் மணிப்புரி திரைப்படம் லண்டனில் நடந்த 'Bafta' விருதினைப் பெற்று, நமது நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளது. முதல் இந்தியப் படமாக இப்புகழ் பெற்ற விருதினை பெற்ற குழுவிற்கு நமது ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமர் என அனைவரும் வாழ்த்தினைத் தெரிவித்து உள்ளனர். நாமும் நமது வாழ்த்தினைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

ஜம்மு, காஷ்மீரில் குல்மார்க் பகுதியில் 'கேலோஇந்தியா' குளிர்கால விளையாட்டின் 6–வது சீசன் பிப்ரவரி 22 தொடங்கி நான்கு நாட்கள் நடக்கவிருக்கும் இப் போட்டியில் 30 மாநிலங்களைச் சேர்ந்த 400 க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர். 22 வயதுக்குள்ளான மகளிருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியான Rising Stars-ல் இரண்டாவது முறையாக கேப்டன் ராதா யாதவ் தலைமையிலான இந்திய A அணி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. அணிக்கு நமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்! 'டி20' உலக கோப்பை சூப்பர் 8 போட்டியில் இந்தியா வெற்றி பெற நமது அணி வீரர்களை, எல்லாம் வல்ல ஈசனை வணங்கி வாழ்த்துவோம்!

பொதுத் தேர்வு எழுதிக் கொண்டிருக்கும், எழுதப் போகும் மாணவச் செல்வங்களுக்கு சென்னை கார்காத்தார் சங்கம் மற்றும் கார்காத்தார் ஒப்புரவின்

நல்லாசிகளும்! நல் வாழ்த்துக்களும்!

வானில் சூழ்ந்திருக்கும் போர் மேகம் விரைவில் களைய, மக்கள் அமைதியுடன் வாழ ஈசனைப் பிரார்த்திப்போம்.

நன்றி! வணக்கம்!!

## வாழ்த்துகிறோம்

சென்னை கார்காத்தார் சங்கத்தில் சுமார் 40 வருடத்திற்கு மேலாக இணைந்து சேவை செய்து வருபவர் மாநில அளவில் மூத்த கார்குல முன்னோடிகள் மேனாள் தலைவர்கள் திரு.ராஜசேகரன் பிள்ளை கேப்டன். திரு. ஜெகதீசன் பிள்ளை போன்ற பல தலைவர்களுடன் இணைந்து சிறப்பாக செயல்பட்டவர் சென்னை சங்கத்தில் தலைவராக இருந்து சிறப்பாக செயல்பட்டவர் தற்போது சென்னை சங்கத்தில் செயலாளராகவும் கார்காத்தார் ஒப்புரவு வெளியீட்டாளராகவும் தன் பணியை சிறப்பாக செய்து வருகிறார் 2008 2009 வாக்கில் சென்னையில் உள்ள சங்கத்தில் உறுப்பினர்கள் வருகை சற்று குறைந்த நேரம் சென்னை சங்க மேனாள் கார்காத்தார் ஒப்புரவு ஆசிரியர் மறைந்த மாமனிதர் திரு.ரத்தினசபாபதி அவர்கள் மற்றும் சென்னையில் உள்ள சங்க தலைவர்களுடன் இணைந்து 100 கணக்கான இளைஞர்களை அழைத்து பல முறை ஆலோசனை நடத்தி இளையோர் பேரவை உருவாக்கி சங்கத்தை எழுச்சியடைய செய்தவர்களில் முக்கியமானவர் திரு.கைலை.சண்முகம் அவர்கள். என்னையும் ஆனந்தம் செல்வகுமார் அவர்களையும் இளையோர் பேரவையில் இணைத்து சிறப்பாக செயல்பட உறுதுணையாக இருந்தவர். முழு நேர பணியாக கார்குல சொந்தங்களுக்கு சேவை செய்வதில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர் இன்னும் பல சேவைகளை பட்டியலிட்டுக்கொண்டே போகலாம் .

மாநில கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் தேர்வில் மாநில அமைப்புச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். மாநில தலைவருடன் இணைந்து தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்துஇணைப்புச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட உறுதுணையாக இருந்தவர். பின்னர் மாநில பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். தொடர்ந்து சேவை பணிகளை சிறப்பாக செய்து வருபவர் இந்த சமூக சேவை பணிகளை கௌரவித்து தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் கைலை சண்முகம் அவர்களுக்கு சர்வதேச தமிழ் பண்பாட்டு பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி கௌரவித்தது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. கார்குல முன்னோடி செயல்வீரர் மாநில பொதுச்செயலாளர்உடன்பிறவா சகோதரர் திரு. கைலை. சண்முகம் அவர்கள் நீண்ட ஆயுளுடன் சீரும் சிறப்புடன் வாழ KKR மற்றும் தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறோம்

அன்புடன்

Dr.K. ராஜசுந்தரம் பிள்ளை@ KKR K சுரேஷ்

தலைவர், தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

## சங்க நிகழ்வுகள்

### சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நங்கநல்லூர்

துதிப்பவரின் வல்வினை போக்கும் முருகப்பெருமானின் அருளைப் பெற்றுத் தரும் சக்திவாய்ந்த கவசமாம் கந்தசஷ்டி கவசத்தை நமது சங்க அலுவலகத்தில் பாராயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி 22.02.2026 அன்று மாலை 04 மணியளவில் நமது சங்க மகளிரணியினர், நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து கந்த சஷ்டி கவசம் வாசித்தனர். அதனை தொடர்ந்து மகளிரணி செயலர் திருமதி. வனஜா சரவணன் அவர்களது இறைவணக்கப் பாடலுடன் சங்கத்தின் செயற்குழு மற்றும் மகளிரணி கூட்டம் நடைபெற்றது. தலைவர் திரு. கோ. தியாகராஜன் அவர்கள் தலைமை தாங்கினார். சென்ற மாதத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகள் குறித்து தலைவர் விளக்கினார். செயலர் திரு. வே. கண்ணன் அவர்கள் சென்ற மாத அறிக்கையை வாசித்தார். சென்ற மாத கார்காத்தார் தொழில் முனைவோர் கூட்டத்தில் நமது உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. நமது செயற்குழு உறுப்பினர் திரு. K.R. கார்த்திகேயன் அவர்களது இணையர் யோகா வல்லுனர் திருமதி. லதா கார்த்திகேயன் அவர்கள், நங்கநல்லூர் ராம்நகர் சங்க விழாவில் யோகாவின் முக்கியத்துவத்தை பற்றி செயல்முறை விளக்கங்களுடன் செய்து காட்டியது அனைவராலும் பாராட்டப்பட்டது. நமது குல கல்வி தந்தை திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் CREW TRUST மூலம் சுமார் 04 கோடியே 09 லட்சம் ரூபாய் நமது குல மாணாக்கர்களுக்கு உதவித்தொகையாக வழங்கியமைக்கும் அதற்கு உதவிகரமாக இருந்த மனிதநேயம் திரு. T.N. முத்துக்குமாரசாமி அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர்கள்தனதுகருத்துக்களைஎடுத்துவைக்கும் விதமாக இந்த மாதம் செயலர் திரு. வே. கண்ணன் அவர்கள் நீர் மேலாண்மை என்ற தலைப்பில் எடுத்து வைத்த கருத்துக்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும்படி அமைந்தது சிறப்பு. தாமாக முன்வந்து மாலை சிற்றுண்டி அளித்த திருமதி. கிருஷ்ணகுமாரி அவர்களுக்கும் இரவு விருந்து வழங்கும் பொறுப்பை ஏற்ற திருமதி. நிரஞ்ஜனா கணேஷ் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. இணைச்செயலர் திரு. S. சம்பத்குமார் அவர்களது நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– வே. கண்ணன், செயலாளர்

### போரூர்

11–01–2026 அன்று போரூர் கார்காத்தார் சங்கத்தின் செயற்கூழு கூட்டம் திரு இளங்கோ, கௌரவ ஆலோசகர் அவர்கள் அலுவலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் விளக்கு பூஜை நடத்துவது என்று தீர்மாணிக்கபட்டு இதனை செயற்குழு உறுப்பினர்கள், சிறப்புடன் நடத்த ஆலோசிக்கபட்டது. இதற்கு தேவையான நிதியை செயற்குழு உறுப்பினர்கள் அளிப்பது என்றும் முடிவு செய்யபட்டது. அதன் அடிப்படையில் 25–01–2026 ஞாயிறு மாலை 6 மணியளவில் முகலிவாக்கம் ஸ்ரீகுபேர விநாயகர் ஆலயத்தில் கொட்டும் மழையும் பாராது நமது கார்குல மகளிர்கள் கலந்து கொண்டு விளக்கு பூஜையை மிகவும் சிறப்பாக நடத்தினார்கள் மற்றும் மாநில தலைவர் KKR சுரேஷ், கணினி ஆசிரியர் எழிலன் மற்றும் நமது செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். அனைவருக்கும் பிரசாதம் வழங்கபட்டது, கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றிகள். ஸ்ரீ குபேர விநாயகர் அருள் கிட்டட்டும். நமது சங்கத்தின் சார்பில் காசியாத்திரை செல்ல முடிவு செய்யபட்டது. தேர்தல் மற்றும் சில சூழ் நிலை காரணமாக தாமதமானது அதனை தற்போது மே மாதத்தில் செல்லமுடிவு செய்யப்பட்டுள்ளது.

A. ராமலிங்கம், தலைவர்

## புதுச்சேரி :

11–1–2026 அன்று, புதுவை கார்குல மகளிர் பொங்கல் விழா, திரு. தமிழ்ச்செல்வன் அவர்களது ராமலிங்க நகர் வீட்டின் மாடியில், நம் சங்க தலைவர் ராஜன்பாபு தலைமையில், பொங்கல் வைத்து மகளிர் அணியின் உறுப்பினர்கள் மிக சிறப்பாக கொண்டாடினர். இதில் மகளிர் அணியினர் கலந்து கொண்டு, சிறப்பாக பொங்கல் வைத்து, சாப்பிட்டு மகிழ்ந்தனர். 11–2–26 அன்று மாதாந்திர கூட்டம் காலை 11–00 மணிக்கு திருவாளர், திருநீலகண்டன், V. மணவெளி, அரும்பார்த்தபுரம் வீட்டில் நடைப்பெற்றது. இதில் வந்திருந்த அனைவரையும் திரு. நீலகண்டன் வரவேற்றார்கள். சங்கத் தலைவர் திரு. ராஜன்பாபு அவர்கள் சங்க நடவடிக்கையை பற்றி எடுத்துரைத்தார். பிறகு குலுக்கல் சீட்டில் திரு. தமிழ்ச்செல்வனுக்கு கிடைத்தது. பரிசு சீட்டில் திரு. இரத்தின சபாபதி அவர்களுக்கும், மகளிர்க்கு திருமதி. பானுமதி நீலகண்டன் அவர்களுக்கும் கிடைத்தது. வந்திருந்த அனைவருக்கும், சிறப்பான விருந்து அளித்த திருமதி. பானுமதி நீலகண்டன் அவர்களுக்கு, பாராட்டு தெரிவிக்கப்பட்டது. தீர்த்தனகிரியில் நடைபெற்ற கோவில் கும்பாபிஷேகத்திற்கு சென்ற 15 பேருக்கும் திருமதி. நிர்மலா ஞான சேகரன் குடும்பத்தினர் சிறப்பாக வரவேற்று, காலை, மதியம் உணவு வழங்கி சிறப்பித்தனர். 8–3–26 ஞாயிறு அன்று மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடுவது என்று முடிவு எடுக்கப்பட்டது.

– S. தமிழ்ச்செல்வன், செயலாளர்.

## செந்துறை :

சங்க கூட்டம் 01–02–2026 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் மண்டலத்தலைவர் திரு. R. இரவீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. T. வைத்தியநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

பொங்கல் சிறப்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்து சிறப்பித்த தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் பொருளாளர் திரு. G. இராமநாதன் பிள்ளை அவர்களுக்கும், மண்டலத்தலைவர் திரு. R. இரவீஸ்வரன் அவர்களுக்கும், மற்றும் மண்டல செயலாளர்கள் திரு. A. சிவக்குமார், திரு. M. செந்தில்நாதன் ஆகியோருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

2026–ம் ஆண்டு நாட்காட்டி (காலண்டர்) வெளியிட மூலக்காரணமாக செயல்பட்ட நமது தலைவர் திரு. T. வைத்திநாதன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகளை ஒருங்கிணைந்து நடத்திக்கொடுத்த ஸ்ரீராம் பள்ளியின் தாளாளர் திரு. V. செல்வகணபதி மற்றும் நாட்டார் ஆயில் & பிளவர் மில் உரிமையாளர் திரு. A. கார்த்திகேயன் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

சிறந்த முறையில் மதிய உணவு சமைத்துக்கொடுத்த திருமதி. வளர்மதி செல்வம் குழுவிற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கடந்த 30–01–2026–ல் திருக்கடையூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீஅமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் சங்க செயற்குழு உறுப்பினர் திரு. மு. சச்சிதானந்தம் – திருமதி. ச. சந்திரகலா தம்பதியரின் மணிவிழா சிறப்பாக நடைபெற்றது. மணிவிழா தம்பதியர் இருவரும், அவர் தம் குடும்பத்தினர் அனைவரும் அனைத்து வளங்களுடன் பல்லாண்டு வாழ்க என வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

01–02–2026 ஞாயிறு காலை திரு. ப. கொளஞ்சிநாதன் – திருமதி. கொ. புஷ்பா தம்பதியர் செந்துறையில் புதிதாக கட்டியுள்ள வீட்டின் புதுமனை புகுவிழாவிற்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

இறுதியாக சங்கச் செயலாளர் திரு. S. ஜெயராமன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது.

– சா. ஜெயராமன்,
செயலாளர்.

## சீர்காழி :

செயற்க்குழுக்கூட்டம் 7–2–26 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் ஜெயச்சந்திரன் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் ஆண்டு விழா 26–4–26 நடத்துவது என்றும், மங்கல சந்திப்பு 28–6–26 நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பொருளாளர் ரவிச்சந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## இளந்தோப்பு

சங்க கூட்டம் இளந்தோப்பு சிவன் கோயில் வளாகத்தில் நடைபெற்றது. தலைமை: மண்டல செயலாளர் S. சீனிவாசன் பிள்ளை முன்னிலை: திரு. ந. நடேசன் பிள்ளை

தைபூசம் அன்று முருகன் & அம்பாள் இருவருக்கும் சந்தனகாப்பு அலங்காரம் மற்றும் விளக்குபூஜை மற்றும் அன்னதானம் மிக சிறப்பாக நடைபெற்றதற்கு S. சபாநாயகம் பிள்ளை நன்றி தெரிவித்தார்கள். மேலும் சிவன்ராத்திரி அன்று நான்கு கால பூஜைகளும் முறையே முதல் காலம் வெங்கடேசன் பிள்ளை & குடும்பத்தினர், இரண்டாம் காலம் குலோத்துங்கள் பிள்ளை & குடும்பத்தினர், மூன்றாம் காலம் சபாநாயகம் பிள்ளை & குடும்பத்தினர், நான்காம் காலம் சந்திரா ஆசிரியை அவர்களும் சிறப்பாக நடத்தியமைக்கு நன்றி தெரிவித்தார்கள்.

தை பூசத்திற்கான வரவு & செலவு கணக்கு உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

G. செல்வநாயகம் பிள்ளை அவர்கள் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– V. ராமமூர்த்தி, தலைவர்

## மணிக்கிராமம் :

சங்க கூட்டம் **30–01–2026** அன்று சிவன் கோவிலில் பிரதோஷ வழிப்பாட்டுக்கு பிறகு தலைவர் திரு. G. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. கௌரவத்தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்கவும் செயலர் திரு. T. கபிலன் சென்ற மாத அறிக்கையை படிக்கவும் பொருளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது.

மணிக்கிராமம் கார்குல சொந்தங்கள் அனைவரும் ஒன்று கூடி பொங்கல் விழாவை **16–01–2026** அன்று மிகவும் சிறப்பாக கொண்டாடினார்கள். திரு. M.M.S. சீர்காழி மண்டல தலைவர் அவர்கள் விழா ஏற்பாடுகளை செய்து இருந்தார். மகளிர் அணியினரும் இணைந்து சிறப்பாக செய்தனர். இசைப்போட்டி, பாட்டு போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல், சிலம்பு ஆட்டம், குண்டு எறிதல், இசை நாற்காலி, லக்கி கார்னர் முதலிய விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

சங்கத்திற்கு ஒலி பெருக்கியை மயிலாடுதுறை நல்லாசிரியர் திரு. செல்வகுமார் அவர்கள் வாங்கி கொடுத்தார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. காலை **10** மணிக்கு துவங்கி மதியம் **1.30** மணிக்குள் விளையாட்டு போட்டிகள் நடைபெற்று பிறகு எல்லோருக்கும் மதிய உணவு அருஞ்சுவையுடன் பரிமாறப்பட்டது. இறுதியாக பொருளர் நன்றி கூற நாட்டுபண்ணுடன் விழா இனிதே முடிந்தது.

- G. அன்பழகன், தலைவர்.

## செம்பொன்னார் கோவில் :

சங்க கூட்டம் **6–02–2026** அன்று சங்க தலைவர் சி. இராமநாதன் அவர்கள் தலைமையில் நமது சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் இல்லத்தில் திருமதி. இரத்தினவதி அவர்கள் இறைவணக்கம் பாடிட, திரு. M.C. செல்வராஜ் அவர்கள் வரவேற்பு நல்கிட சென்ற மாத கூட்டறிக்கை திரு. குரு. முத்துகுமார் செயலர் அவர்கள் வாசிக்க வரவு – செலவு கணக்கை சங்க பொருளர் கூற கூட்டம் இனிதே தொடங்கியது.

சங்க தலைவர் பேசுகையில் கூட்டம் ஏற்று நடத்தும் இல்லத்தாருக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்கள். கடந்த **26–01–2026** திருச்சியில் நடைபெற்ற செயற்குழுவில் ஏற்றப்பட்ட தீர்மானங்களை அனைவருக்கும் வாசித்து காட்டினார்கள். திருச்சம்பள்ளி குடமுழுக்கு விழாவில் நமதுசங்கத்தின்மூத்தவகுப்பினர்திரு.கணபதிநடனம் அவர்களின் திருப்பணி செயல்பாடுகள் சிறப்பானதாக இருந்தது என்றும் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்கள். திரு. மதியழகன் மற்றும் திருமதி. இரத்னாவதி சிறப்புரையாற்றினார்கள்.

திரு. கணபதிநடனம் பேசுகையில் கோவில் திருப்பணி செய்வதை அனைவரும் விரும்பி செய்ய வேண்டும்என்றும்,திருப்பணியில்ஈடுபடும்பொழுதுபல இன்னல்கள் வரும் என்றும் அவற்றை பொறுமையுடன் கையாள வேண்டும் என்றும் கூறினார்கள்.

கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தாருக்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ஒன்றிய துணைத்தலைவர் திரு. செந்தில்குமார் (மடப்புரம்) அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– கி. இராமநாதன்,
தலைவர்.

## பரசலூர் :

சங்க கூட்டம் **1–2–2026** அன்று தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

செயலர், பொருளர் அறிக்கை வாசித்து பதிவேடுகள் உறுப்பினர் பார்வைக்கு விடப்பட்டது. கோயில்களில் உழவாரப்பணி நடத்துவது சம்பந்தமாக முடிவு செய்யப்பட்டது. உறுப்பினர்கள் அனைவரும்

கலந்து கொள்ளும் ஆன்மீக இன்ப சுற்றுலா மேற்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. சிவராத்திரியை சிறப்பாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

சங்க உறுப்பினர் திரு. ரமேஷ் பிள்ளை அவர்களின் தாயார் நல்லுச்சேரி கண்தான வள்ளல் திருமதி. தங்கபாப்பு அம்மையார் ஆன்மா சாந்தியடைய மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. திருமதி. செந்தமிழ் செல்வி நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு: சங்க கூட்டம் சென்ற 05.02.2026 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது. சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் வரவேற்று பேசினார். பின்னர் மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ வெள்ளப்பிள்ளையார் கோவில் குடமுழுக்கு தொடர்பாக கிராமவாசிகளிடம் கலந்து ஆலோசனை செய்து, குடமுழுக்கு சிறப்பாக செய்திட தீர்மானிக்கப்பட்டது.

15.02.2026 அன்று நடைப்பெற்ற மகா சிவராத்திரியை முன்னிட்டு, மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ வடுவகிர் கன்னி சமேத ஸ்ரீ வலம்புரிநாதர் சுவாமிக்கு 3 கால அபிஷேகங்களை முறையே திரு. R. ராதாகிருஷ்ணன், திரு. R. அய்யாத்துரை மற்றும் S. குமரேசன் ஆகியோர் அன்னத்தானத்துடன் மிக சிறப்பாக செய்தமைக்கு சங்கம் சார்பில் அனைவருக்கும் கோவிலில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

– B. இலட்சுமணன்
தலைவர்

## 80. இராதா நல்லூர் :

சங்க கூட்டம் 8–2–2026 அன்று சங்க செயலர் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமாரசாமி தலைமையில் சங்க செயலர் R.M.A. இராஜா முத்தையா வரவேற்புடன் நடைபெற்றது. பிப்ரவரி மாதத்தில் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

2026–ம் ஆண்டிற்காண உறுப்பினர் சந்தாதொகையினை அடுத்த கூட்டத்தில் செலுத்திட உறுப்பினர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது. பூர்வீகம் இலையமுது கூடம் மயிலாடுதுறையில் வசித்து வந்த வழக்கறிஞர் R. தம்பையா அவர்கள் 2–1–2026 அன்று இயற்கை எய்தியதால் அவரை இழந்து வாடும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. சங்க பொருளாளர் M. சீனிவாசன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி,
தலைவர்.
9443645646

## பூம்புகார் - மேலையூர் :

சங்க கூட்டம் 1–2–2026 அன்று உறுப்பினர் திரு. M. பரணிதரன் இல்லத்தில் நடைபெற்றது. தலைவர் திரு. N. பாண்டியன் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். பின்னர் இந்த மாத பிறந்த நாள் மற்றும் திருமணநாள் விழா கொண்டாடும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். மகளிர் அணி உறுப்பினர்களின் வருகையை அதிகபடுத்தி மாத ஆலோசனை கூட்டத்திற்கு அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இறுதியில் தேனீர் விருந்துடன், பொருளாளர் திரு. R. வெங்கடேசன் அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- G. விஜயராகவன்,
செயலாளர்.
Cell : 9994635306

## நெடுங்காடு :

திரு. K.S. கணபதிசுப்ரமணியன் அவர்கள் இல்லத்தில் திருமதி. K.V. விஜயா – திரு. பிரகாஷ்ராம் அவர்கள் முன்னிலையில் தலைவர் திரு. K. மோகன்தாஸ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இறைவணக்கம் செல்வி. M. அக்ஷயா பாடினார்கள்.

திரு. பிரகாஷ்ராம் அவர்கள் தன்னுடைய பணி, கல்வி உதவி அளித்த சங்கத்திற்கு நன்றி கூறி பேசினார். வாழ்வில் இந்த நல்ல நிலை அடைய உதவிய சங்கத்திற்கு தேவையான உதவிகளை செய்வதாகவும் உறுதி அளித்தார்.

26– ஆம் தேதி திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு குறித்த செய்திகளை மண்டலச் செயலாளர் உறுப்பினர்களிடம் விவரித்தார்.

தலைவர் திரு. R.S. பிரகாஷ் ராம் அவர்களை வாழ்த்தி பேசினார். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு

குறித்தும் வாழ்க்கை நெறிமுறைகள் குறித்தும் நம் குல இளைஞர்களுக்கு வழிகாட்டுமாறு கேட்டுக் கொண்டார். நம் குல இளைஞர்களுக்கு தனி Whats App குழு தொடங்க முடிவு செய்யப்பட்டது.

திருமதி. K.V. விஜயா அவர்கள் சங்கத்தின் நிலையால் தன் குடும்ப நிலை உயர்ந்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

மகளிரைக் கொண்டு முதலில் online-ல் தையற்பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டது.

உறுப்பினர் விவரக் கையேடு மே–1 ஆம் தேதி புத்தகமாக சித்திரை நிறைமதி நாளில் அளிக்க முடிவு செய்யப்பட்டது.

– திரு. S. ரெங்கநாதன்,
செயலாளர்.

## திருவாரூர் :

சங்க கூட்டத்தினை 31–1–2026 அன்று தலைவர் கண்ணபிரான் பிள்ளை தலைமை ஏற்று நடத்தினார்கள்.

தலைவர் உரையில் நமது சங்க மாதாந்திர கூட்டத்திற்கு அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டு கொண்டார். சங்கம் பரிந்துரைத்த மூன்று மாணவர் கல்வி உதவிநிதி அளித்து உதவிய கார்குல வள்ளல் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு சங்கத்தின் நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள். மற்றும் தலைவர் K.K.R. சுரேஷ் அவர்கள் துணைவியார் இயற்கை எய்தியதை கேட்டு மிக்க வருத்தமுடன் இரங்கலை பதிவு செய்தார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் சங்கம் சார்பில் சிற்றுண்டி தேநீர் வழங்கப்பட்டது.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பனங்காடி பெருமாள்கோவில் குடமுழக்குவிற்கு சங்கம் சார்பில் ரூ. 2500 நன்கொடை அளிக்கவும்,

அடுத்த கூட்டம் மார்ச் இரண்டாம் வாரம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

மாநில தலைவர் திரு. சுரேஷ் அவர்களின் மனைவி திருமதி. ஆனந்தி அவர்கள் மறைவிற்கும், திரு. இளங்கோ நம்பி பிள்ளை F/o திரு. தமிழரசன் போலகம் கிராமம் அவர்கள் மறைவிற்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியின் முடிவில் திரு. கந்தசாமி பிள்ளை நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

– அ. சோமசுந்தரம்,
செயலாளர்.

## கும்பகோணம் :

சங்க கூட்டம் தாராசுரம் எலுமிச்சங்காபாளையம் மேல வீதி பிளாட் நம்பர். 2, காமராஜ் நகர், குணசீலன் அவர்கள் இல்லத்தில் தலைவர் ஏ.எஸ். பழனி அவர்கள் தலைமையில் துணைத்தலைவர் எம். பாலகுரு முன்னிலையில் நடைபெற்றது. இறைவணக்கம் மற்றும் வரவேற்புரை திரு. எம். பாலகுரு அவர்கள் ஆற்றினார்கள். தலைவர் அவர்களின் தலைமை உரைக்கு பிறகு செயலாளர் அறிக்கையை எஸ். விஜயகுமார் அவர்கள் வழங்கினார்கள். பசிப்போர் புசிக்க குழு அறிக்கை திரு. எஸ். குணசீலன் அவர்கள் அளித்தார்கள். புரவலர் நிதி குறித்தும், இளைஞர்கள் குழாம் அமைப்பது குறித்தும் புரவலர் குழுத் தலைவரும், இணைச்செயலாளருமான திரு. எம். சாமிநாதன் அவர்கள் உரையாற்றினார்கள்.

பொங்கல் விழா வரவு செலவு கணக்கு பொருளாளர் திரு. ஜி. ராஜாராமன் அவர்களால் வாசிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாசி மகம் பத்து நாள் அபிஷேக ஆராதனை மற்றும் மங்கள சந்திப்பு நிகழ்ச்சிகளை குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் சங்க துணைத்தலைவர் திரு. பி. ராஜசேகர் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

- S. விஜயகுமார், செயலாளர்.

## தஞ்சை :

சங்கத்தின் 40–வது ஆண்டு விழா, வரவு, செலவு, கணக்குள் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

சங்க உறுப்பினர் திரு. G. வைத்திலிங்கம் பிள்ளை (இந்திய அஞ்சல் துறை) அவர்களுக்கும் திரு. S. சுப்பிரமணியன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களுக்கும் திரு. முத்துவேல், (ஓய்வு) TVS நிறுவனம்) அவர்களின் தாயார் மறைவிற்கும்

திருமதி. S. ஆனந்தி (திரு. K.K.R.K.S) தலைவர் அவர்களின் துணைவியாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. ர. மோகன் அவர்களின் புதல்வி M. காவியலெட்சுமி, வருவாய்துறை அலுவலர் அவர்களுக்கு "2025–ம் ஆண்டிற்கு சிறந்த பணியாளர்" என்ற விருது மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்பட்டதை முன்னிட்டு அவர்களுக்கு சிறப்பு செய்வது எனவும் வாழ்த்துகளும், பாராட்டுகளும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

- S. மதியழகன்,
செயலாளர்.

## மதுரை :

சங்கக்கூட்டம் 08–02–26 அன்று தருமைபுர ஆதீன மண்டபத்தில் நடந்தது. தலைவர் கு. சிவசுப்ரமணியம் தலைமை தாங்கினார். பொருளாளர் திரு. முருகன் வரவேற்றார். திரு. மாணிக்கவாசகம், திருமங்கலம் கடவுள் வாழ்த்துப்பாட கூட்டம் துவங்கியது. கடந்த ஜனவரி மாதம் உயிர்நீத்த நமது சங்க உறுப்பினர்கள் திரு. உதயகுமார், பொதும்பு, திருமதி. சோ. மீனாட்சி, திருமங்கலம், திரு. கணேசன், கூத்தியார்குண்டு அவர்களுக்கு ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

02–01–26 அன்று மண்டபத்திற்கு வருகை தந்த தவத்திரு. தருமைபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களை சங்க உறுப்பினர்கள் திரு. கணேசன், திரு. ராமலிங்கம், திரு. பசுங்கிளி, திரு. உமைபொருபாகம், திரு. முருகன் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டனர். பெண்ணாடம் மெய்கண்டார் அறக்கட்டளைக்கு சங்க உறுப்பினர்களிடம் வசூல் செய்து ரூபாய் பத்தாயிரம் நன்கொடையாக அனுப்பி வைக்கப்பட்டது. நமது செயற்குழு உறுப்பினர் திரு. பசுங்கிளி உடல்நலம் குன்றி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பெறுவதை அறிந்து அன்னாருக்கு மருத்துவ உதவித்தொகையாக ரூபாய். 20000 உறுப்பினர்கள் வழங்கினர். சங்கம் சார்பாக 01–01–26 அன்று நடந்த திருவளர்செல்வன் சு. சரண்குமார் – செல்வி. மோகன சத்யா திருமணத்திற்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

முனைவர் கு. சிவசுப்ரமணியம், தலைவர், மதுரை மாவட்ட கார்காத்தார் சங்கம்.

## ஈரோடு :

25–01–26 அன்று சங்க மகளிர் அணி சார்பாக, ஈரோடு நகர், மண்டபம் வீதியில் உள்ள மரகதம் அண்ணாமலை மெட்ரிக் பள்ளியில், பொங்கல் விழா திருமதி. M. தேன்மொழி முருகானந்தம் தலைவர் மற்றும் செயலாளர் செல்வி. S. அலமேலுமங்கை அவர்கள் தலைமையில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

மதிய உணவுக்கு பிறகு Lucky cornor போட்டி நடத்தி, அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேற்கண்ட விழா நடத்தியதற்கு இடவசதி ஏற்பாடு செய்து கொடுத்த திரு. S. திருநாவுக்கரசு அவர்களுக்கும், அவரின் குடும்பத்தாருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

01–02–26 அன்று சென்னிமலையில் தைப்பூசம் விழாவை முன்னிட்டு, சங்கம் சார்பாக பாதயாத்திரையாக வந்த 1000 பக்தர்களுக்கு சாம்பார் சாதம், சர்க்கரைப் பொங்கல், தயிர்சாதம் மற்றும் நீர்மோர் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த அன்னதான நிகழ்ச்சி நடத்துவதற்கு இடம் வழங்கி ஏற்பாடுகள் செய்த திரு. தங்கதுரை, திரு. அசோக்குமார் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

- S. பால்ராஜ்,
செயலாளர்.

## ஒசூர்

ஒசூர் கார்காத்த வெள்ளாளர் சங்கத்தின் 26–வது ஆண்டு விழா மற்றும் குடும்ப விழா 04.01.2026 ஞாயிறன்று ஆந்திர சமிதியில் நடைபெற்றது. அதற்கு திரு. S. பிரகாஷ் பிள்ளை அவர்கள் தலைமையேற்க விழா துவங்கியது. திரு. V. இளவரசன் பிள்ளை அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். செல்வி. கோபிஷா அவர்களின் பரதநாட்டியத்துடன் செல்வன். ஷாத் அவர்களின் தமிழ்தாய் வாழ்த்து வாசிப்புடன் விழா ஆரம்பித்தது.

திரு. A. கணேஷ் லட்சுமணன் பிள்ளை அவர்கள் விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்கள். திரு. G. சுந்தரபாண்டியன் பிள்ளை, திரு. S. ராமலிங்கம் பிள்ளை, திரு. M. சிவகுமார் பிள்ளை, திரு. R.T. அரசமூர்த்தி பிள்ளை ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திரு. டாக்டர் கைலை ஷண்முகம் பிள்ளை அவர்களும், அமைப்புச் செயலாளர் திரு. சீனி பழமலை பிள்ளை அவர்களும் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். மேலும் சிறப்பு அழைப்பாளராக திருச்சி சங்க தலைவர் திரு. க. சிவகுருநாதன் அவர்கள் கலந்துகொண்டு "வாழ்க்கை வசப்படும்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. சிறுவர், சிறுமியர்கள், பெண்கள், ஆண்கள் மற்றும் couple game நடைபெற்றது. மதிய விருந்திற்கு பிறகு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், கலந்துகொண்ட அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. புதிய குடும்பங்களின் அறிமுகமும் நடைபெற்றது. திரு. M. மனோகர் பிள்ளை அவர்கள் அறிக்கை வாசித்தார்கள். திரு. I. சிதம்பரம் பிள்ளை அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறைவடைந்தது.

– M. மனோகர், ஒசூர்

# இந்திய வன வளம்

## FOREST RESOURCES OF INDIA

Melaiyur S. Anbalagan 98413 73184

தற்போது அரசியல் சட்டப்படி உள்ள ஐ ஏ எஸ் என்கிற இந்திய ஆட்சிப் பணி, ஐ எஃப் எஸ் என்கிற இந்திய வனத்துறை சேவை மற்றும் ஐ பி எஸ் என்கிற இந்திய காவல் சேவை என்கிற மூன்றும் அகில இந்தியப்பணிகளாகும்.

**எதிலும் சட்டம்**

நம்முடைய நீதியரசர் உயர் திரு டி என் வள்ளி நாயகம் அவர்கள் ஒரு முறை ஒரு அணிந்துரையில் குறிப்பிட்டது போல் நம் நாட்டில் காலையில் எழுந்தது முதல் இரவுபடுக்கப் போகும் வரை நம்முடைய அன்றாட வாழ்வில் நம்மை அறியாமலே நாம் சட்டத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது .எவ்வளவு தீர்க்க தரிசனமான வார்த்தைகள் இந்திய வனத்துறை சேவையான ஐ எஃப் எஸ் ஸை உருவாக்கியதும் ஒரு சட்டம் தான் சாதாரண சட்டமல்ல நம் நாட்டின் சட்டங்களுக்கே ஆணி வேரான இந்திய அரசியல் சட்டம்.

**சம்பந்தப்பட்ட சட்டங்கள்**

அகில இந்திய பணிகள் சேவைகள் சட்டம் 1951 ஒரு இந்தியச் சட்டம் இந்த சட்டம் இரண்டு அகில இந்தியப் பணிகளை உருவாக்குகிறது மேலும் மூன்று பணிகளை உருவாக்க வழி வகுக்கிறது இந்திய அரசியல் சாஸனம் பகுதி XIV பிரிவு 312 2 ன் படி இந்த சட்டம் ஐ ஏ எஸ் Indian Administrative Service என்னும் இந்திய ஆட்சிப் பணி மற்றும் ஐ பி எஸ் Indian Police Service என்னும் இந்திய காவல் பணி என்ற இரண்டு அகில இந்திய பணிகளை உருவாக்குகிறது இந்த சட்டம் மேலும் மூன்று அகில இந்தியப் பணிகளை அதாவது 1. இந்திய பொறியாளர்கள் பணி நீர்ப்பாசனம், மின்சாரம் கட்டிடங்கள் மற்றும் சாலைகள் 2 இந்திய காடுகள் பணி மற்றும் 3 இந்திய மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணி ஆகியவைகளை உருவாக்க வகை செய்கிறது இந்த மூன்று சட்டங்களில் இந்திய காடுகள் பணி மட்டும் அகில இந்திய சட்டமாக 1966 ல் உருவாக்கப்பட்டுள்ளது.

**இந்திய காடுகள் சேவைச் சட்டம் ஐ.எஃப்.எஸ்**

மேலே சொல்லப்பட்ட மூன்று அகில இந்திய சட்டங்களில் முதல் சட்டமான ஐ ஏ எஸ் என்னும் இந்திய ஆட்சிப் பணி மற்றும் அடுத்த சட்டமான ஐ பி எஸ் என்னும் இந்தியக் காவல் சேவை பற்றியும் ஏற்கனவே பார்த்துள் ளோம் சந்தர்ப்பம் கிடைக்கும் போது மூன்றாவது அகில இந்திய சேவையான இந்திய காடுகள் பணி பற்றிப் பார்ப்போம் என அதில் குறிப்பிட்டிருந்தேன் இக்கட்டுரையில் ஐ எஃப் எஸ் என்னும் அந்தக் காடுகள் சேவை பற்றிப் பார்ப்போம் அச் சட்டத்தைப் பற்றிப் பார்க்கும் முன்பாக இந்திய வன வளத்தைப் பற்றியும் கொஞ்சம் பார்ப்போம்.

**இந்தியக் காடுகள்– பரப்பளவும் வளர்ச்சியும்**

இந்தியாவின் வன வளம் அதாவது காடுகள் ஒரு முக்கியமான கிராமியத் தொழிலாகும் அதுமட்டுமல்லாமல் அது ஒரு பெரிய சுற்றுப்புறச் சூழல் வளமாகும். ரஷ்யா, ப்ரேசில், கனடா, அமெரிக்கா, சீனா, காங்கோ ஆஸ்திரேலியா இந்தோனேஷியா மற்றும் சூடான் போன்ற நாடுகளுடன் இணைந்து இந்தியா உலகில் வன வளம் மிக்க 10 நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. உலகில் உள்ள காட்டு வளத்தில் இந்த நாடுகளின் பங்கு சுமார் 67 ஆகும். 1990 – 2000 ஆவது ஆண்டுகளில் இந்தியக் காடுகள் ஆண்டு தோறும் 0.20 வீதம் வளர்ச்சி அடைந்துள்ளன 2000–2010 ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 0.7 ஆக இருந்தது அதற்குப் பிறகு வந்த 10 ஆண்டுகளில் காடுகள் அழிக்கப்பட்டது பெரும் கவலைக் குரிய விஷயமாகும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாயக் கழகத்தின் மதிப்பீட்டின் படி 2010 ஆண்டு அளவில் இந்திய வன வளம் ஏறக்குறைய 68 மில்லியன் ஹெக்டேர் அல்லது நாட்டின் மொத்தப் பரப்பில் 22 ஆக இருந்தது 2015 வாக்கில் அக்காடுகள் 70.68 மில்லியன் ஹெக்டேராக ஆகி நாட்டின் மொத்த பரப்பில் 23.8 த்தை ஆக்ரமித்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது 2013 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட காடுகள் கணக்கெடுப்பின் படி 2012 ஆம் ஆண்டில் காட்டுப் பரப்பளவு 69.8 பரப்பளவு என செயற்கைக் கோள் கணக் கெடுப்பில் கண்டறியப்பட்டுள்ளது அக் கணக்கின் படி இரண்டு ஆண்டுகளில் காடுகள் 5.871 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு அதிகமாகி உள்ளன இருந்த போதிலும் இந்த வளர்ச்சி அல்லது பெருக்கம் முக்கியமாக வடக்கு மத்திய மற்றும் தெற்கு மாநிலங்களில் தான் இருந்தன வட கிழக்கு மாநிலங்களில் 2010 லிருந்து 2012 க்குள் குறைந்து காணப்பட்டன.

**இந்தியக் காடுகளின் வகைகள்**

ஆரோக்கியமான சுற்றுப் புற சூழலைக் கொடுப்பதிலும் காற்றில் உள்ள மாசுக் களைக் கட்டுப்படுத்துவதிலும் இந்தியக் காடுகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

**இந்தக் காடுகளை முக்கியமாக கீழ்க் கண்ட ஆறு வகைகளாகப் பிரிக்கலாம்**

1. ஈரமான வெப்ப மண்டலக் காடு MOIST TROPICAL FOREST, 2. வறண்ட வெப்ப மண்டலக் காடு

DRY TROPICAL FOREST, 3. மலை நாட்டு மித வெப்ப மண்டலக் காடு MONTANE TEMPERATE FOREST, 4. மலை நாட்டு வெப்ப மண்டலக் காடு MONTANE SUB TROPICAL FOREST, 5. மலைப் பனி நிலைக் காடு ALPINE FOREST, 6. துணை மலைப் பனி நிலைக் காடு SUB ALPINE FOREST அந்தக் காடுவகைகளின் தன்மையைப் பார்ப்போம்

**1. ஈரமான வெப்ப மண்டலக் காடு MOIST TROPICAL FOREST**

இவ்வகைக் காடுகளில் ஆண்டுக்கான மழை அளவு 200–250 செ.மீ ஆகவும் உஷ்ணம் 24–27 டிகிரீ ஆகவும் ஈரப்பதம் 80 ஆகவும் இருக்கும். மேற்குக் கடற்கரை அஸ்ஸாம் மேற் பகுதி கிழக்கு ஹிமாலாயாவின் கீழ் சாய்வுப்பகுதி ஒரிஸா கடற்கரை மற்றும் அருகில் உள்ள மலைப் பகுதிகளீல் இவை காணப்படும்.

**2. வறண்ட வெப்ப மண்டலக் காடு DRY TROPICAL FOREST**

இந்த வகைக் காடுகள் வட இந்திய மலைப் பகுதிகளிலும் தென் இந்தியாவின் சில மாநிலங்களிலும் காணப்படும் இவற்றின் மழையளவு 51 லிருந்து 151 செ.மீ வரை இருக்கும் இக்காடுகளில் குளிர் பனிக் காலங்களில் இலைகள் உதிர்ந்து குளிர் காலம் முடிந்த பிறகு புதிய இலைகள் துளிர்க்கும் மழைக் காலங்களில் பசுமையான இலைகள் துளிர்க்கும்.

**3. மலை நாட்டு மித வெப்ப மண்டலக் காடு MONTANE TEMPERATE FOREST**

வட இந்தியாவில் இமய மலையின் நடுப்பகுதிகளில் 1801 லிருந்து 3001 மீட்டர் உயரத்திலும் தெற்கில் நீலகிரி மலைப்பகுதிகளிலும் இக்காடுகள் காணப்படும் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 201 செ.மீ அளவுக்கு மழை இருந்தால் தான் இவ்வகைக் காடுகள் உருவாக முடியும்.

**4. மலை நாட்டு வெப்ப மண்டலக் காடு MONTANE SUB TROPICAL FOREST**

இவ்வகைக் காடுகள் முக்கியமாக அஸ்ஸாம் மாநிலம், நாகாலாந்து, மிசோராம், மேகாலயா, மணிப்பூர், அருணாசலப் பிரதேசம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி போன்ற பகுதிகளில் காணப்படும்.

**5. மலைப் பனி நிலைக் காடு ALPINE FOREST**

இந்த புல்வெளிகள் மலைகளில் 3000 மீட்டர் உயரத்துக்கு மேல் ஸ்னோ என்னும் பனி நிலைக்கு சற்று கீழே ஆரம்பிக்கும் இவைகள் ஹிமாலயா பகுதிகளிலும் ட்ரான் ஹிமாலயாவின் குளிர் டெசர்டுகளிலும் இவை பொதுவாகக் காணப்படும் இந்த வகை பனி நிலைக் காடுகள் 1.5 மீட்டர் உயரத்துக்கு மேல் வளராது.

**6. துணை மலைப் பனி நிலைக் காடு SUB ALPINE FOREST**

ஹிமாலயாவில் பனி நிலைக்கு அருகில் 2901 லிருந்து 3501 மீட்டர் உயரத்தில் காணப்படும் வெயில் காலத்தில் இங்கு $20^{o}c$ யிலிருந்து $22^{o}c$ அளவு வெப்பம் இருக்கும் குளிர்காலங்களில் இங்கு வெப்ப நிலை உறையும் நிலைக்குக் கீழேயும் கொட்டும் பனியுடனும் இருக்கும்.

**இந்திய வனச் சேவையில் சேரத்தகுதிகள்**

**கல்வித்தகுதி – கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு பொருளில் பட்டப் படிப்பு**

கால் நடை வளர்ப்பு அனிமல் ஹஸ்பண்ரி .கால் நடை அறிவியல் வெட்னரி சயின்ஸ். தாவரவியல் பாடனி இரசாயனம் கெமிஸ்ட்ரி நிலவியல் ஜியாலஜி கணிதம் மேத்ஸ் ,புள்ளியியல் ஸ்டாடிஸ்டிக்ஸ் வேதியல் பிசிக்ஸ் விலங்கியல் ஜூவாலஜி , விவசாயம் அக்ரிகல்சர் வனவியல் ஃபாரஸ்ட் ரி பொறியியல் இஞ்சினியரிங்.

**வயது**

ஆகஸ்ட் முதல் தேதி அன்று அதாவது வனவியல் தேர்வுக்கான அந்த ஆண்டுக்கான தொடக்க நிலைத் தேர்வு நடை பெறும்போது தேர்வு எழுதும் விண்ணப்பதாரர் 21 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு அதிகமாகாதவராகவும் இருக்க வேண்டும். இந்த வயது வரம்பு குறிப்பிட்ட ஜாதி , உடல் ஊனம் போன்ற குறிப்பிட்ட இனங்களில் தளர்த்தப்படும்.

**மூன்று நிலைத் தேர்வுகள்**

யு பி எஸ் சி என்னும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம் ஐ எஃப் எஸ் என்னும் இந்திய வனத்துறை சேவைப் பணிக்கு பணியாளர்கள் / அதிகாரிகளை தேர்வு செய்ய கீழ்க்கண்ட முறையில் தேர்வுகள் நடத்தும்.

**தேர்ச்சி நடை முறை**

போட்டித் தேர்வுகள் இரண்டு தொடர்ச்சியான நிலைகளைக் கொண்டவையாகும் வனவளச் சேவைப் பணிக்குத் தேர்வு செய்ய நடத்தப்படும் சிவில் சர்வீஸ் ப்ரிலிமினரி எக்ஸாம் எனப்படும் இந்தியக் குடியியல் தொடக்க நிலை பணித் தேர்வு அப்ஜெக்டிவ் டைப் என்று சொல்லப்படும் புற நிலை வகையைச் சார்ந்ததாகும். விடைகளில் ஏ பி சி டி இவைகளில் ஒன்றைத் தேர்வு செய்தல் அடுத்ததாக நடை பெறும் இந்திய வனச் சேவையில் உள்ள காலி இடங்களுக்கான மெயின் என்னும் முக்கியத் தேர்வு எழுத்து மூல மான தேர்வு மற்றும் நேர் முகத் தேர்வு ஆகியவைகளைக் கொண்டதாகும்.

## 1. தொடக்க நிலைத் தேர்வு

தொடக்க நிலைத் தேர்வு இரண்டு தேர்வுகள் கொண்டது இவை ஏற்கனவே சொல்லப்பட்ட அப்ஜெக்டிவ் டைப் எனப்படும் புற நிலை வகையைச் சார்ந்தவை அவற்றுக்கு மொத்தம் 400 மதிப் பெண்கள் இந்தத் தேர்வுகள் வேட்பாளர்களைப் பரிசோதிப்பதற்காக நடத்தப்படுவதாகும் அந்த ஆண்டுக்கானத் தொடக்க நிலைத் தேர்வுக்குத் தகுதி உடையவர்கள் என குழுவால் அறிவிக்கப்பட்டவர்களே, அவர்களுக்கு இதர தகுதிகள் இருந்தால் முக்கிய தேர்வு எழுதுவதற்கும் தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

குறிப்பு – சிவில் சர்வீஸ் எக்சாம் எனப்படும் இந்தியக் குடியியல் பணித் தேர்வில் இத்தகைய வன சேவைப் பணிக்குமான பொதுவான வேட்பாளர்கள் இருக்கக்கூடும் ஆதலால் பொதுவான ஸ்க்ரீங் என்னும் வடிகட்டுதல் தொடக்க நிலை தேர்வு மூலம் முடிந்த பிறகு வனத்துறை பணி இடங்களில் உள்ள நிரப்பப் பட வேண்டிய காலி இடங்களின் அடிப்படையில் வனத்துறை பணியாளர் தேர்வுக்கான முக்கிய தேர்வு எழுதத் தகுதி உள்ளவர்கள் பட்டியல் தயாரிக்கப்படும்.

## முக்கியத் தேர்வு

வனத்துறை சேவைப் பணியாளர் தேர்வுக்கான முக்கிய தேர்வில் எழுத்து மூலமான தேர்வுமற்றும் நேர் முகத் தேர்வு என்ற இரண்டும் இருக்கும் இந்த முக்கிய தேர்வு எழுதத் தகுதி உள்ளவர்களை தேர்ந்தெடுக்க நடத்தப் படும் ப்ரிலி மினரி என்னும் தொடக்க நிலைத் தேர்வில் எடுத்த மதிப் பெண்கள் இறுதியில் வெற்றி பெறும் வேட்பாளர்களை நிர்ணயம் செய்யப் பயன் படாது. பொதுவாக இறு தித் தேர்வு முக்கிய தேர்வு எழுத அனுமதிக்கப்படும் வேட்பாளர்கள் வனத் துறை யில் நிரப்பப் பட வேண்டிய காலி இடங்களின் மொத்த எண்ணிக்கையைப் போல் 12 அல்லது 13 மடங்கு இருக்கும்.

## 2. எழுத்து மூலமான முக்கியத் தேர்வு

இந்த எழுத்து மூலமான முக்கிய தேர்வில் கட்டுரை வடிவில் எழுத வேண்டிய தொடக்கநிலைத் தேர்வு போல் அப்ஜெக்டிவ் டைப் அல்ல. 6 தேர்வுகள் உண்டு. இந்தத் தேர்வில் தேர்வு ஆணையம் நிர்ணயிக்கும் குறைந்த பட்ச மதிப் பெண்கள் பெற்ற வேட்பாளர்கள் விண்ணப்பதாரர்கள் ஆளுமைத் தேர்வுக்காக நேர் முகத் தேர்வுக்கு வருமாறு ஆணையத்தால் அழைக்கப்படுவார்கள். நேர் முகத் தேர்வுக்கு அழைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய காலி இடங்களின் மொத்த எண்ணிக்கையைப் போல் இரண்டு மடங்கு இருக்கும்.

## 3. நேர் முகத் தேர்வு

நேர் முகத் தேர்வுக்கு 300 மதிப் பெண்கள் உண்டு இதில் தகுதி பெற குறைந்த பட்ச மதிப் பெண் கிடையாது. முக்கியத் தேர்வில் எழுத்து மூலமான தேர்வு மற்றும் நேர் முகத் தேர்வு ஒரு வேட்பாளர் பெற்ற மொத்த மதிப்பெண்ணே இறுதிப் பட்டியலில் அவர் இருக்கும் இடத்தை நிர்ணயிக்கும்.

நம்முடைய நாட்டு காடுகளின் வளம் மற்றும் ஐ எஃப் எஸ் என்னும் இத்தகைய வனச் சேவை பணியில் சேரும் முறைகள் பற்றி ஏதும் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டங்கள் அல்லது வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் கரீர் இந்தியா. காம், ஃப்ரீ ஜாப் அலெர்ட்.காம், விக்கீ பீடியா. ஓஆர்ஜி மற்றும் ஃப்ரென்விச்.நிக்.இன் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97 . போன் 98413 73184

---

## வருந்துகிறோம்

கிழக்கு தாம்பரத்தில் வசிக்கும் தேரழுந்தூர் R. ராஜாமணி அவர்கள் துணைவியார் திருமதி. சரோஜினி அம்மாள் 30–1–26 வெள்ளி அன்று இறைவனடி சேர்ந்தார்கள். சென்னை கார்காத்தார் சங்கம் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறது.

**********

சீர்காழி தாலுக்கா, வைதீஸ்வரன் கோயில், ரயிலடி தெரு, திரு. S. ராஜரெத்தினம் பிள்ளை அவர்களின் தகப்பனார் திரு. சபாநாயகம் பிள்ளை அவர்கள் 27–1–26 அன்று இயற்கை எய்தினார் என்பதையும் ,

சீர்காழி தேர் வடக்கு வீதி, திரு. விஜயன் அவர்களின் தகப்பனார் திரு. சிவனேசன் பிள்ளை அவர்கள் 2–2–26 அன்று இயற்கை எய்தினார் என்பதையும்,

சீர்காழி வாய்க்காங்கரை தெரு, திரு. T. சாமிநாதன் பிள்ளை அவர்கள் 4–2–26 அன்று இயற்கை எய்தினார் என்பதையும் சீர்காழி சங்கம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

## குழந்தையின் முன்னேற்றம்

A. RAJARETHINAM, PORUR,
CHENNAI. PH : 9444224366

ஒரு சிறு குழந்தை பிற்காலத்தில் சாதனை படைக்க வேண்டுமென்றால் அதன் சிந்தனை ஆற்றல், கற்பனை சக்தி, சுதந்திரம், அங்கீகாரம் ஆகியவற்றை வளர்க்க பெற்றோர்களும், ஆசிரியர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

ஒரு இரண்டு வயது குழந்தை ஒரு படம் வரைந்தால், அதன் முயற்சியை பாராட்ட வேண்டும். மேலும் வரைய உற்சாகப்படுத்த வேண்டும். அதற்கு படம் வரைய காகிதங்கள், கலர்பென்சில்கள், எழுதும் போர்டு போன்றவற்றை வாங்கித் தர வேண்டும். ஒரு குழந்தை பலகாரம் உள்ள ஒரு பாத்திரத்தை தானாகவே திறக்க முயற்சி செய்தால், அப்போது அந்த குழந்தைக்கு உதவி செய்து மூடியை திறக்க உதவினால், அந்த குழந்தை மிகவும் மகிழ்ச்சி அடையும். குழந்தைகள் எப்போதும் எதையாவது கற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றன. அந்த ஆற்றலை பெரியவர்கள் உற்சாகப்படுத்தி வழி நடத்த வேண்டும். அந்த செயல் குழந்தையின் மூளை வளர்ச்சியை சிறப்பாக்கும்.

ஒரு குழந்தை ஒரு பொருளை இழுத்து கீழே தள்ளி உடைத்து விட்டால், பெரியவர்கள் கோபப்படக் கூடாது. அதற்கு மாறாக வேறு ஒரு பொருளைக் கொடுத்து அந்த குழந்தையை திசை திருப்ப வேண்டும். குழந்தை மழை நீரிலும், குப்பை உள்ள இடங்களிலும் விளையாட நினைக்கும். அப்போது முறையாக அறிவுரை கூறி அங்கிருந்து சீரான நல்ல இடத்துக்கு அழைத்து சென்று விளையாடச் செய்ய வேண்டும். முறையாகக் கூறினால் குழந்தை புரிந்து கொள்ளும். குழந்தை எந்த துறையில் நாட்டம் காட்டுகிறது என்பதை கண்டறிந்து அந்த துறையில் சிறு வயதிலேயே பயிற்சி கொடுத்தால் மிகவும் நல்லது.

குழந்தைகளின் உன்னதமான எண்ணங்களை சீர்படுத்தி வழி நடத்தினால், அவர்களை அறிவாளிகளாக ஆக்கலாம். சிறுவர்களின் மனதில் பல சந்தேகங்களும், கேள்விகளும் எழும். அக்கேள்விகளுக்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் சிந்தித்து, சரியான பதிலைக் கூறுவது அவர்களின் வளர்ச்சிக்கு உதவும். பள்ளியில் ஆசிரியர்கள் அன்பான முறையில் பாடம் கற்றுத்தர வேண்டும். பெற்றோர்கள் அடிக்கடி ஆசிரியர்களை சந்தித்து குழந்தையின் வளர்ச்சியைப் பற்றி கேட்டு அறிய வேண்டும்.

கற்பனை என்பது குழந்தையின் வளர்ச்சியில் முக்கியமான அம்சம். ஒவ்வொரு குழந்தையும் பெரிய விஞ்ஞானியாகவோ, எஞ்சினீயராகவோ, டாக்டராகவோ, பைலட்டாகவோ, நடிகராகவோ, ஆசிரியராகவோ, விளையாட்டு வீரராகவோ, வக்கீலாகவோ, பாடகராகவோ ஆக நினைக்கிறது. பள்ளிக் கூடத்தில் பல பாடங்களைப் படிக்கும் குழந்தைகளுக்கு மனதில் பல கற்பனைகள் தோன்றுகின்றன. உலகில் பல வெற்றியாளர்களைப்பற்றி அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். நாமும் அப்படி ஆக வேண்டும் என்று நினைக்கிறார்கள். அந்த சிந்தனையை பெற்றோர்கள் அறிந்து உற்சாகப்படுத்த வேண்டும். அப்போது அந்த குழந்தைகள் பிற்காலத்தில் சிறந்த சாதனையாளர்களாவார்கள்.

குழந்தைகளுக்கு அறிவை வளர்த்துக்கொள்ள சுதந்திரம் கொடுங்கள். நேர்மறை எண்ணங்களை அவர்களுக்கு போதிக்க வேண்டும். சிறுவர்களிடம் அடிக்கடி 'உன்னால் முடியும்' என்று சொன்னால் அவர்கள் சுய நம்பிக்கையுடன் செயல்படுவார்கள். அறிவும், திறமையும் வளர சுதந்திரம் அவசியம்.

குழந்தைக்கு முன் உதாரணமாக நீங்கள் நடந்து அவர்களை உற்சாகப்படுத்தி, அன்பாக அறிவுரை கூறி வழி நடத்தினால் அந்த குழந்தை சாதனை படைக்கும் என்பது உறுதி.

---

## சிகரத்தை அடைய உன்னால் முடியும்!

அன்பான உறவுகள், நட்பு வட்டாரங்களே... வளமான, நிறைவான ஒரு வாழ்வை அடைய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் நம் மனதில் இருக்க வேண்டும். ஒரு சதவீதம் ஊக்கமும், தொண்ணூற்றொன்பது சதவீதம் உழைப்பையும் கொண்டது தான் திறமை என்பது. என்ன செய்ய போகிறோம் என்பதற்கு வரையறை வகுத்து கொள்ளும் மனிதன் தன்னால் என்ன செய்ய முடியும் என்பதற்கும் வரையறை வகுத்துக் கொள்கிறான்.

மனிதப் பண்புகளில் மிகச்சிறந்தது தைரியம். அது தான் மற்ற எல்லாப் பண்புகளுக்கும் மூலகாரணம். எது நடந்தாலும் சரி வாழ்வின் முக்கிய அம்சங்களான நம்பிக்கை, முயற்சி லட்சியம் போன்றவற்றை எப்போதும் இழந்து விடக் கூடாது. ஒருவனிடம் இருக்கும் மொத்த ஆற்றலையும் வெளிக்கொண்டு வர வேண்டுமானால் தட்டிக்கொடுத்து பாராட்ட வேண்டும். நம்மைச் சுற்றி எல்லையற்ற வாய்ப்புகள் இருக்கின்றன. கிடைக்கும் வாய்ப்புகளை சரியான விதத்தில் பயன்படுத்திக் கொள்ளும் மனநிலை இருந்தால் மட்டுமே, அந்த வாய்ப்பின் வாயில்கள் திறக்கும். சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வேண்டும். ஒரு செயலை சிறப்பாக செய்து முடிப்பதுதான் அந்த செயலுக்குக் கிடைக்கக் கூடிய விருது. வெற்றி கிட்டும் வரை மனதில் உள்ள

உறுதியை ஒரு போதும் இழக்கக் கூடாது. உங்களின் லட்சியத்தை உங்களின் ஆற்றலுடன் ஒப்பிட்டு நீங்கள் அடையப் போகும் வெற்றியைத் தீர்மானியுங்கள்.

நம்முடைய முயற்சிக்கு எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் எதிர் நீச்சல் போட்டு முன்னேற முயற்சி செய்ய வேண்டும். இத்தகைய மனத்திடத்தை நாம் வளர்த்துக் கொண்டால், வெற்றியின் உச்சத்திற்கு செல்வது நிச்சயம்! குறிக்கோளை அடைந்து விடுவோம் என்ற நம்பிக்கை தான் உலகின் மகத்தான சக்திகளுள் ஒன்று. தான் ஈடுபடும் வேலையில் தன் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் ஆத்மார்த்தமாக ஒப்படைப்பவனால் மட்டுமே வெற்றியாளனாக முடியும்.

பாரம்பரிய நல்லொழுக்க பண்புகளான உண்மை, நேர்மை, மனித நேயம், அன்பு, நம்பிக்கை போன்ற நற்குணங்களை பெற்றோராகிய நாம் நம் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்போமானால், மகிழ்ச்சி என்னும் மாளிகையை அவர்களாகவே கட்டிக்கொள்வார்கள்.

நான் ஆசிரிய பணியில் (HM) இருந்த காலத்தில் பள்ளியின் ஆண்டு விழா நடத்துவோம். ஆசிரியர்கள் அனைவரும் சேர்ந்து திட்டமிட்டு சிறப்பான முறையில் விழா நடந்தேற சேர்ந்து செயல்படுவோம். விழா நடத்துவதின் நோக்கமே பிஞ்சு குழந்தைகளிடமும், மாணவர்களிடமும் புதைந்திருக்கும் திறமைகளை வெளிகொணர்வதற்காக நடத்தப்படுகிறது. தங்கள் குழந்தைகள் மேடையில் ஏறி ஆடுவதும், பாடுவதும், நடிப்பதும் பார்த்து பெற்றோர்கள் மகிழ்ச்சியில் பூரித்து போவார்கள். பணியிலிருக்கும் ஆசிரியர்கட்கு அந்தக் கல்வி ஆண்டின் நிறைவு குறித்து மகிழ்ச்சி. இம் மாணவச் செல்வங்கள் இந்தியா என்ற கட்டிடத்தின் தூணை தாங்கி பிடிக்கும் கரங்கள், சிகரத்தை அடைய துடிக்கும் சிற்பிகள்!

– இரா. திலகம்,
வையூர்.

---

## வாழ்த்துகிறோம்

சீர்காழி பாலசுப்ரமணியன் நகர், திரு. L. சிவக்குமார் – திருமதி. கவிதா இவர்களின் புதல்வி S. தரணிகா–க்கும், சென்னை, பம்மல் திரு. அமிர்தலிங்கம் – திருமதி. புவனேஸ்வரி இவர்களின் புதல்வன் A. ஹரிவிக்னேஷ்– க்கும் 15–2–26 அன்று சீர்காழி ஏஞ்சல் மஹாலில் நடைபெற்ற திருமணத்திற்கு, மணமக்களுக்கு சந்தனமாலை அணிவித்து, வாழ்த்து மடல் வாசித்து வழங்கப்பட்டது.

## காலையில் லேட்டாக எழுவதால் இழக்கும் விஷயங்கள் .....

காலையில் எழுவது என்பது நம் தினசரி வாழ்வில் ஒரு முக்கியமான பகுதி. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சரியான நேரத்தில் எழுவது மிகவும் அவசியம். ஆனால் பலர் காலையில் லேட்டாக எழுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்தப் பழக்கம் நம் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பாதிப்பதுடன், நம் தினசரி செயல்பாடுகளையும் தடுக்கிறது.

**உடல் நல பாதிப்பு :**

காலையில் லேட்டாக எழுவதால் நமது உடலின் இயற்கையான தூக்க சுழற்சி மாறுகிறது. இதனால் நாள் முழுவதும் உடல் சோர்வு, தூக்கம், மனச்சோர்வு, போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். போதுமான அளவு தூக்கம் இல்லாததால் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து பல நோய்கள் ஏற்படும் வாய்ப்புள்ளது. லேட்டாக எழுவதால் உணவுப் பழக்கங்கள் மாறி உடல் எடை அதிகரிக்கும்.

**மன அழுத்த பிரச்சனைகள் :**

ஒருவர் தொடர்ச்சியாக காலையில் லேட்டாக எழும்போது, நேர பற்றாக்குறை ஏற்பட்டு, அவசர அவசரமாக எல்லா செயல்களையும் செய்ய வேண்டிய சூழல் ஏற்படும். இது ஒருவரின் மன அழுத்தத்தை அதிகரித்து, பதட்டத்தை ஏற்படுத்தும். போதுமான அளவு தூங்காததால் மூளை சரியாக செயல்படாது. இதனால் படிப்பு, வேலை போன்றவற்றில் செயல்திறன் குறையும்.

**சமூக வாழ்க்கை பாதிப்பு :**

காலையில் லேட்டாக எழுவதால் குடும்ப உறுப்பினர்களுடன் நேரம் செலவிடுவது குறைந்து உறவுகள் பாதிக்கப்படலாம். நண்பர்கள், உறவினர்கள், சக ஊழியர்களுடன் இணையும் நிகழ்ச்சிக்கு தாமதமாவதால், அவர்களுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்வது பாதிக்கும்.

**படைப்புத்திறன் குறைவு :**

காலையில் நாம் மிகவும் புத்துணர்ச்சியாக இருந்தால் மட்டுமே புதிய யோசனைகள் எளிதில் தோன்றும். ஆனால், லேட்டாக எழுவதால் இந்த வாய்ப்பை நாம் இழந்துவிடுகிறோம். கலை மற்றும் இலக்கிய படைப்பாற்றலுக்கு ஒரு தெளிவான மனம் அவசியம். வாழ்க்கையில் வெற்றி பெற நாம் காலையை சரியாக பயன்படுத்த வேண்டும். இதற்கு இரவில் சரியான உறக்கத்தை பெறுவது அவசியம். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இனி விரைவாக உறங்கி, விரைவாக எழும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்.
செல் : 9943702054

# நகர கார்காத்த வேளாளர் சங்கம்
## சீர்காழி
பதிவு எண்.102/2019

## 22-வது மங்கல சந்திப்பு

அன்புடையீர்! வணக்கம்,

சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் **22-வது** மங்கல சந்திப்பு நிகழ்ச்சியானது **28.06.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 1.00 மணி வரை** சீர்காழி, தேர்வடக்கு வீதி **சங்க கட்டிடம் (சி.எம்.டிரஸ்ட்)** தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். நிகழ்ச்சியில் பங்குபெற விரும்புவர்கள் பதிவுக்கட்டணம் **ரூ.600/-**ஐ விவரப்பட்டியலுடன், கீழ்க்கண்ட முகவரிக்கு **15.06.2026**க்குள் அனுப்பிட வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நேரில் வந்தும் பதிவு செய்து கொள்ளலாம். வங்கி D.D. அனுப்ப விரும்பும் பதிவுதாரர்கள் Nagara Karkatha Velalar Sangam என்ற பெயரில் சீர்காழியில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவும். நிகழ்ச்சி நல்ல முறையில் நடத்திட எப்பொழுதும் போல் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு நல்கிட அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

என்றும் அன்புடன்
**கி.ஜெயச்சந்திரன் பிள்ளை,** தலைவர் **63697 29337**
**சி.அகோரம்பிள்ளை,** செயலாளர் **94861 94225**
**சே.ரவிச்சந்திரன்,** பொருளாளர் **97903 19517**
**இராம.முரளி பிள்ளை,** நிறுவனர். சி.எம்.டிரஸ்ட். **94420 85841**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**திரு.கல்.சுகுந்தவனநாதன்**
11, தியாகராஜ நகர்,
சீர்காழி - 609110.
செல்: 94420 83310, 86108 78905

**திரு.S.பிரகாசம்,** M.Com.,
5, R.N.காம்ப்ளக்ஸ், ரயில்வே ரோடு.
கொள்ளிடம் - 609102. சீர்காழி தாலுக்கா
**for GPay** செல் : 7395865318


**தொடர்புக்கான நேரம்: காலை 10.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை**

## விண்ணப்ப படிவம்

| | |
|---|---|
| பெயர் | ........................ |
| ஆண் / பெண் | ........................ |
| பிறந்த தேதி | ........................ |
| உயரம் (செ.மீ) | ........................ |
| நட்சத்திரம் | ........................ |
| கோத்திரம் | ........................ |
| நிறம் | ........................ |
| கல்வித்தகுதி | ........................ |
| பணி விபரம் & ஊதியம் | ........................ |
| தந்தைபெயர் | ........................ |
| பூர்வீகம் | ........................ |
| பணி விபரம் | ........................ |
| தாயார் பெயர் | ........................ |
| பூர்வீகம் | ........................ |
| பணிவிபரம் | ........................ |
| உடன் பிறந்தோர் | ஆண் ☐ பெண் ☐ |
| விருப்பம் மற்றும் இதர தகவல்கள் | ........................ |
| தொடர்பு முகவரி தொலைபேசி உலாபேசி மற்றும் அஞ்சலக குறியீட்டு எண்ணுடன் | ........................ |
| மின் அஞ்சல் முகவரி | ........................ |

# வாழ்க மணமக்கள்





கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் வட்டம், காவனூர் கிராமம் வில்வராய தெய்வத்திரு. மா. முத்துக்கிருட்டிணன் – நலமுடன் தேவசேனா மற்றும் புவனகிரி வட்டம், C. மேலவன்னியூர் கிராமம் முனைதரிய திரு. தி. சௌரிராஜன் – திருமதி. சௌ. அன்பரசி – ஆகியோரின் பெயர்த்தியும், கூடுவாஞ்சேரி திரு. மு. மணிவண்ணன் – திருமதி. செந்தில்குமாரி ஆகிய எங்களின் அன்பு மகளுமான திருநிறைசெல்வி. **Dr. ம. அபி (எ) யாழினி,** MOT., மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், தேரெழுந்தூர் கிராமம் காளிங்கராய தெய்வத்திரு. சு. ரெங்கநாதன் பிள்ளை – தெய்வத்திருமதி. R. பிரேமா மற்றும் தரங்கம்பாடி வட்டம் – வல்லம் கிராமம் ஒகலுட திரு. மு. ராஜகோபால் பிள்ளை – தெய்வத்திருமதி. ரா. ராஜகுமாரி ஆகியோரின் பெயரனும் திரு. ரெ. இளங்கோவன் – திருமதி. இ. கமலி இவர்களின் அன்பு மகனுமாகிய திருநிறைசெல்வன். **Er. இ. பாலாஜி,** B.E., இவர்களது திருமணம் 06–02–2026 வெள்ளிக்கிழமை சிதம்பரம் MYM பைசல் மஹால் நடைபெற்ற எங்கள் இல்ல திருமணத்திற்கு வருகை தந்து வாழ்த்திய உறவுகள் மற்றும் நண்பர்களுக்கும் எங்கள் இருவீட்டார் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோனு.

காளிங்கராய **ரெ. இளங்கோவன்**
**இ. கமலி**
**ம. சரவணகுமார்**
**சி. திவ்யா**
**ச. ஆராத்யா**
**ச. ஆத்விக்குமார்**
தேரழுந்தூர்.

வில்வராய **மு. மணிவண்ணன்**
**ம. செந்தில்குமாரி**
**ம. ஆடலரசு**
**ஆ. சிவசங்கரி**
**ஆ. நவ்யன்**
காவனூர் – கூடுவாஞ்சேரி.

பிப்ரவரி
15
முதல்

# திறப்பு விழா



## மிக பிரம்மாண்டமாய்...
“கடையென தொடங்கி, கடலென படர்ந்த
## சிதம்பரத்தின் பெருமை

## உங்கள் கஸ்தூரிபாய் கம்பெனி


பைபாஸ் லிங்க் ரோட்டில், கோலாகலமாய்.
வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் ஒரு பிரம்மாண்ட வெளிப்பாடாக
இனிதே தொடர்கிறது இந்த அழகிய பயணம்

பிரம்மிக்க வைக்கும்
1 லட்சம் சதுர அடியில்




பிரத்தியேக வெள்ளி பிரிவு



அன்புடன்...

பலகாரம்.com
உயர்தர சைவ உணவகம்

விழாவை சிறப்பித்து ஆசிர்வதிப்பவர் :

தருமபுரம் ஆதீனம் 27–வது குருமகா சந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## திறந்து வைத்து பெருமை சேர்ப்பவர்கள் :

அன்பான வாடிக்கையாளர்களுடன், பெருமதிப்பிற்குரிய

**திரு.K.R.நாகராஜன்**
FOUNDER, CHAIRMAN & MANAGING DIRECTOR,
RAMRAJ COTTON

**திரு.N.மாணிக்கவாசகம்**
DIRECTOR- RMKV SILKS

**திரு.B.ராஜேஷ்கண்ணா**
CHIEF FINANCE OFFICER
THANGAMAYIL JEWELLERY Ltd.,

**திரு.பரமன் பச்சைமுத்து**
FOUNDER - MALARCHI

**திரு.N.கிருஷ்ணன் C.A**
CHENNAI

**திரு.Dr.K.R.முத்துக்குமார் C.A**
CHIDAMBARAM

**திரு.A.சம்பத்**
KRISHNA MAHAL
CHIDAMBARAM











# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி S. நிவேதிதா |
| படிப்பு | MCA |
| வேலை | Software Engineer at TCS, Chennai<br>Rs. 10 Lakhs/PA |
| பிறந்த தேதி | 06-04-1999 |
| உயரம் | 5' - 6" |
| நட்சத்திரம் | கேட்டை |
| கோத்திரம் | பகுவுட |
| பூர்வீகம் | மயிலாடுதுறை |
| தகப்பனார் | S. செந்தில்வேலன் (Late),<br>Fruit Shop |
| தாயார் | S. லலிதா, (கேசிங்கன்) |
| முகவரி | 2, தெற்கு வீதி,<br>திருவிழுந்தூர்,<br>மயிலாடுதுறை TK. - 609 001.<br>Cell : 75981 79139 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. ஜோதி |
| படிப்பு | B.E. (EEE) |
| வேலை | IT, CTS, OMR<br>Rs. 8.4 Lakhs/PA |
| பிறந்த தேதி | 04.03.1994 |
| உயரம் | 177 cm |
| நட்சத்திரம் | கேட்டை |
| கோத்திரம் | கொங்கராய |
| பூர்வீகம் | T.V புதூர் (விருதாசலம்) |
| தகப்பனார் | C. சிவகுருநாதன் |
| தாயார் | S. சந்திரா |
| முகவரி | 2/76, லட்சுமி விநாயகர் கோயில் தெரு,<br>காரபாக்கம்,<br>சென்னை – 600 097.<br>Cell : 99629 04490 |
| விருப்பம் | சென்னையில் பணிபுரியும் அல்லது பணிபுரிய விருப்பமுள்ள பெண். |



| | |
|---|---|
| பெயர் | செல்வி S. தர்ஷிகா |
| படிப்பு | B.Com., MBA., |
| வேலை | Accenture, Bangalore |
| பிறந்த தேதி | 04.09.2001 |
| உயரம் | 160 cm |
| நட்சத்திரம் | பூரட்டாதி |
| கோத்திரம் | முத்துட |
| பூர்வீகம் | திருச்சிராப்பள்ளி |
| தகப்பனார் | S. சிங்காரவேலன்<br>Wheels India Ltd. (TVS), Padi, Chennai |
| தாயார் | House Wife |
| முகவரி | L 34/4, Central Avenue,<br>Korattur, Chennai - 80.<br>Cell : 99411 28802, 99412 83293 |
| விருப்பம் | சென்னையில் பணிபுரியும் வரன் |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் ARAVINDH M |
| படிப்பு | B.E. (Aeronautical) M.Tech., MBA., |
| வேலை | HR @ Kothari HCK Groups,<br>Manali<br>Rs. 50,000/PM |
| பிறந்த தேதி | 15.02.1994 |
| உயரம் | 6' - 2" |
| நட்சத்திரம் | Revathi |
| கோத்திரம் | Vaanathiraya |
| பூர்வீகம் | Pennadam |
| தகப்பனார் | Magesh M, (Late) |
| தாயார் | Latha .M |
| முகவரி | 3-1/N, Patti Street,<br>Pennadam,<br>Cuddalore Dt.,<br>Cell : 80127 85399 |





# சிறுவர் பகுதி




தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: **94437 00375**

Email: thiagu1943@gmail.com


உங்கள் பாதையை நீங்களே தேர்ந்தெடுங்கள். ஏனெனில் வேறு யாராலும் உங்கள் கால்களைக் கொண்டு நடக்கமுடியாது.

## நல்லதும் கெட்டதும்!



அனைத்துப் பிரச்சனைகளுக்கும் பதிலை உடனே எதிர் பார்க்க முடியாது.வெகு நுட்பமாக,ஆழமாக சிந்தித்த பின்னரே முடிவுக்கு வரமுடியும். ஆனால் சிஷ்யர் ஒருவர் குருவிடம் உலகம் நல்லதா ? கெட்டதா ? என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு பதிலையும் உடனே எதிர் பார்த்தார்.

குரு விளக்கினார்: குட்டியிடம்போய்.தாய்ப் பூனையின் பல் நல்லதா ?கெட்டதா ? என்று கேட்டால்,கருணைக்கு இருப்பிடம் அது என்று சொல்லும்! பூனைக்குட்டி தனது தாயை முற்றிலும் நம்பியிருக்கிறது. சில நேரம். அது தன் குட்டியைப் பல்லால் கவ்விக்கொண்டுபோய்.சாம்பல் குழியில் வைக்கிறது. வேறொரு நேரம்,படுக்கையடியில் பாதுகாப்பாக வைக்கிறது.இப்படித்தாய் .தன் குட்டியைப் பல்லாலேயே காப்பாற்றுகிறது. எனவே பூனைக்குட்டிக்குப் பூனையின் பல் கருணைக்கு இருப்பிடமாக விளங்குகிறது.

அதே பூனையின் பல்லைப் பற்றி ஒரு எலியிடம் கேள்.அது என்ன சொல்லும் தெரியுமா ?

பாழாய்ப்போன கடவுள்.பூனைக்குக் குத்தூசியைப் போன்ற பற்களைப் படைத்திருக்கிறாரே !என்று கவலையோடு சொல்லும்.அதுபோல ,உலகம் நல்லதா ? கெட்டதா ? என்பதும்.உலகத்தின் தன்மை காண்பவரைப் பொறுத்தது. என்று கூறினார் குரு.சிஷ்யன் சிந்திக்கத் தொடங்கினான்.புதிய பாதை அவனுக்குப் புலப்பட்டது.

## காலம் பொன்போன்றது




நேரத்தை வீணாக்கக்கூடாது என்றுதான் பலர் நினைக்கின்றார்கள்.ஆனால் ,அதேசமயம் , அவர்கள் தேவையற்ற தொலைக்காட்சித் தொடர்களை விட்டுவிடவும் தயாராக இல்லை. நல்ல பழக்கங்கள் தங்களிடம் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள்.அதே சமயம்,அவர்களுக்குத் தங்களிடம் உள்ள தீய பழக்கங்களை விடவும் மனம் வருவதில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

பள்ளிக்குழந்தைகள்முதல் பில்கேட்ஸ் வரை அனைவருக்கும் காலம் சமமானது தான்.காலம் பொன்போன்றது, திரும்பபெற இயலாத ஒன்று. தினமும் காலை வழக்கத்தைவிட ஒரு மணிநேரம் முன்னதாக எழுந்து, இரவு அரை மணிநேரம் விழித்திருந்து பணியாற்றினால் உங்களது ஆயுட்காலத்தில் கூடுதலாக பத்து வருடத்தில் செய்யக்கூடிய பணியை செய்துவிட முடியும்.அதனால் ஒவ்வொரு மணித்துளியையும் பொன்துளியாக நினைத்து உங்கள் எதிர்கால திட்டங்களை பட்டியலிட்டு அதன்படி செயலாற்றினால் நிச்சயம் காலம் உங்கள் கையில்தானே!

## மூளைக்கு வேலை

1) 2 அடி உயரமும் 2 அடிவிட்டமும் கொண்ட ஒரு காலியான பிளாஸ்டிக் கூடையில் உங்களால் அதிகபட்சம் அரை அடி விட்டமுள்ள எத்தனை டென்னிஸ் பந்துகளைப் போடமுடியும் ?
2) ஒரு முட்டையை 50 அடி தூரம்வரை உடையாமல் கீழே போடவேண்டும் .எப்படி ?
3) மணி, பாபு, ராமு, சீனு ஆகிய நான்கு பேர் ஒரு வரிசையில் நிற்கிறார்கள்.மணி பாபுவுக்கு வலதுபுறம் இருக்கிறான். ராமு மணிக்கு வலது புறம் இருக்கிறான். சீனு, ராமு, மணிக்கு இடதுபுறம் இருக்கிறான். அவர்கள் நின்ற வரிசை என்ன ?



**அமைந்தாங்கு ஒழுகான் அளவு அறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்.**

மற்றவருடன் ஒத்து நடக்காமல் தன் வலிமை அறியாமல்,தன்னைப் பெரியவனாக எண்ணி நடப்பவன் விரைவில் அழிவான்.



## இவை தெரியுமா?

ஹங்கேரி நாட்டில் டெப்ரெகன் என்ற நகரில் உள்ள ஒரு ஓட்டலில் ஒவ்வொரு மேஜை மீதும் கடிகாரம் வைக்கப்பட்டிருக்கும் .நாம் ஆர்டர் கொடுத்து விட்டு பத்து நிமிடங்களுக்கு மேல் அது தாமததாக வந்தால் .அந்த உணவு நமக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.



**லேடீஸ் ஃபிரிட்ஜ்** லண்டனில் உள்ள வாட்டர்லு பாலத்திற்கு லேடீஸ்ஃபிரிட்ஜ் என்ற பெயரும் உண்டு .காரணம் இரண்டாம் உலகப்போரின்போது பெரும்பாலான ஆண்கள் போருக்குச் சென்றுவிட்டதால்பாலத்தின்கட்டுமானப்பணியை அதிக அளவிலானபெண் தொழிலாளர்களே ஈடுபட்டிருந்தனர். அதனாலேயே அந்தப்பாலத்திற்கு அப்படி ஒரு பெயர் கிடைத் ததாம்.



**தேக்கு மரம்** பல ஆண்டுகள் மழையில் நனைந்தாலும், மண்ணில் கிடந்தாலும் தேக்கு மரத்தை மட்டும் கரையான் அழிப்பதில்லை.இம்மரத்தில் ஆணி அடித்தால் துரு பிடிப்பது இல்லை.காரணம் அதிலுள்ள குங்குலியம் போன்ற எண்ணைப் பசைதான்..



**பிளாட்டினம்** தங்கத்தைவிட பத்துமடங்கு மதிப்பு மிகுந்த உலோகம் பிளாட்டினம்.ஆனால் பளபளப்பு இன்மையால் மக்களிடையே அதிக மவுசு இல்லை. உலோகத்தாதுவில் பத்தில் ஒரு அவுன்ஸ் அளவு என்ற விகிதத்தில் கிடைப்பதால் இது மிகவும் அரிதான உலோகமாயிற்று. நகைக்கு மட்டுமல்ல. பேனா முதல் விமானம் வரை பல விதமான பொருட்கள் தயாரிப்பில் பிளாட்டினம் பயன்படுகிறது.



**ஐஸ்க்கிரீம்** ஐஸ்க்கிரீம் முதன்முதலாக கண்டுபிடிக்கப் பட்டபோது அரச பரம்பரையினர் மட்டுமே ருசித்துச் சாப்பிடும் உணவாக இருந்தது. ஐஸ்க்கிரீம் 13ஆம் நூற்றாண்டில் சீனாவில் கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. மங்கோலிய அரசன் குப்ளாய்கான் (1260–1295) காலத்தில் சொந்தமாக யாரும் ஐஸ்க்கிரீம் தயாரிக்ககூடாது என்ற தடையிருந்தது. இத்தாலிய பயணியான மார்க்கோ போலோ சீனாவிற்கு வந்து அரண்மனையில் தங்கியிருந்த சமயம்.அந்த ரகசியத்தை அறிந்து இத்தாலிய அரச சபையில் வெளியிட்டார்.1500ம் வருடம் வரை அந்தரகசியத்தை காப்பாற்றிவந்தவர்கள் பிரான்ஸ் நீதிமன்றம் அனுமதி பெற்று அதை வெளியிட .உலகமெங்கும் ஐஸ்க்கிரீம் செய்யும் முறை பரவியது..



**வீணை** ஏழு ஸ்வரங்களுக்குள் ஏழு கோடி ராகங்கள் என்றால் நம்ப முடிகிறதா ? ஆம் வீணையின் மூலம் இந்த ஏழுகோடி ராகங்களையும் இசைக்கவும் மீட்டவும் முடியும் என்பதுதான் உண்மை! ஆமாம் ,இந்த வீணையின் விலை என்ன தெரியுமா ?இரண்டாயிரம் ரூபாய் முதல் பத்தாயிரம் ரூபாய் வரை! கல்விக் கடவுளின் கையில் இருப்பதும் வீணைதானே! இலங்கேஸ்வரன் தனது ஆட்சிக்கொடியில் வீணையைத்தான் சின்னமாகப்பொறித்திருந்தாக வரலாறு கூறுகிறது.இது தொடர்பான முக்கியச் செய்தி டாக்டர்.அப்துல்கலாம் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான இசைக்கருவியும் இதுதான்.

### சர்தார் வல்லபாய் பட்டேல்



சர்தார் வல்லபாய் பட்டேல் விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபடுவதற்கு முன்னால் நீதிமன்றத்தில் சிறந்த வழக்கறிஞராகப் பணியாற்றி வந்தார். நேர்மைக்கு மட்டுமே வாதாடிவந்த இவர் வாதாடும் திறன்படைத்தவர்.

ஒருசமயம் அவரது மனைவியார் வீட்டில் உடல் நலமில்லாதிருந்தபோது ஒரு முக்கியமான வழக்கில் ஈடுபட வேண்டியதாயிற்று. நீதிமன்றத்தில் குறிப்பிட்ட வழக்கு விசாரணை ஆரம்பமானது. பட்டேல் பல்வேறு சாட்சியங்களையும் முக்கிய குறிப்புகளையும் நீதிபதியிடம் தந்தபடியிருந்தார். அப்போது திடீரென ஒரு தந்தி வந்தது. ஒரு நிமிடம் அதனைப்படித்துப் பார்த்துவிட்டு அவர் மீண்டும் தன் வழக்கில் கவனம் செலுத்தினார். அன்றைய வழக்கில் பட்டேலின் வாதிடும்திறன் சிறப்பாக இருந்தது. நீதிமன்ற நேரம் முடிந்ததும் உடன் வழக்கறிஞர்கள் பட்டேலைப் பாராட்டினர்.

பின்னர் ஒருவர் மட்டும் தனியே பட்டேலிடம் வந்து உங்களுக்குத் தந்தி வந்ததே என்ன விபரம் என்று கூறமுடியுமா ? எனக்கேட்டார். உடனே பட்டேல்அது வேறு ஒன்றுமில்லை என் மனைவி இறந்துவிட்டார் எனக்கூறினார். அனைவரும் திடுக்கிட்டனர் அப்படி இருக்க ஏன் அங்கு செல்லாமல் இங்கு நின்று வாதாடிக்கொண்டிருந்தீர்கள் எனக்கேட்க இறந்த மனைவியை இனி நான் காப்பாற்ற முடியாது. ஆனால் உயிரோடு இருக்கும் எனது கட்சிக்காரரை நான் காப்பாற்றலாம் அல்லவா ? என்பதால்தான் வாதத்தைத் தொடர்ந்து முடித்தேன் என்று கூறினார்.எதற்கும் கலங்காத இந்த உள்ளப்பாங்குதான் இவருக்கு இரும்பு மனிதர் என்ற பெயரை சம்பாதித்துக்கொடுத்தது.

### சந்தோஷம்

சந்தோஷம் வெளியிலிருந்து வாங்கும் பொருள் அல்ல.அது நாமாக உருவாக்கிக் கொள்ளக் கூடியது. அடுத்தவர்கள் அனுபவிப்பதையெல்லாம் பார்த்து பொறாமைப்பட்டு ,அவற்றை நாமும் அனுபவிக்கவேண்டுமென ஆசைப்பட்டு ,அந்த ஆசைகளை கடன் வாங்கியாவது நிறைவேற்றிக் கொள்பவர்கள்தான்தூக்கத்தை தொலைத்து துக்கத்தில் தவிக்கிறார்கள். இருப்பதைக் கொண்டு சிறப்புடன்வாழ்பவனே புத்திசாலி. அவனே சந்தோஷமாக இருப்பவன்.எவ்வளவுதான் முன்னெச்சரிக்கையாக இருந்தாலும், எதிர்பாராத சிக்கல்,பிரச்சனை,தடுமாற்றங்களால் மனம் நொடித்துபோய் கவலையும் கலக்கமும் உங்கள் சந்தோஷத்தினை விரட்டுகிறதா ? எதிர்பாராமல் குறுக்கிடுவதை விதி என்பதைத்தவிர வேறு என்ன பண்ண முடியும் ? இதுவும் கடந்துபோகும் என்று சமாளிக்கத் தயாராகுங்கள்.சந்தோஷம் உங்களை நிழல்போல தொடரும். சந்தோஷத்தைத் தேடாதீர்கள்.ஆனால் எப்போதும் சந்தோஷமாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

### விடுகதைகள்

1. கண்ணில் தென்படுவான் ஆனால் கையில் பிடிபடமாட்டான்.அவன்யார் ?
2. சிறகு இல்லாமலேயே ஊர் ஊராகப்போகும். அது என்ன ?
3. நின்ற இடத்தில் நின்றபடி 100 பேருக்கு வழி காட்டுவான். அவன் யார் ?
4. அவன் உருகினால் எடை குறையும்.ஆனால் ஒளி கிடைக்கும் .யார் அவன் ?
5. அவனைக்காணமுடியாது.ஆனால் உணரமுடியும்.அவன் யார் ?
6. இரவும் பகலும் ஒலித்திருக்கும்.இதயம்போல் துடித்திருக்கும்.அது என்ன ?
7. தடுக்குபோட்டேன் எடுக்க முடியவில்லை.அது என்ன ?
8. வளைந்து நெளிந்தவன்.ஆனாலும் வழிப்பயணத்திற்கு உதவுவான்.யார் அவன் ?
9. இது யார்போட்ட கோடு,கைமுழுக்க ரோடு. அது என்ன ?



**கண்ணதாசன் கணக்கு :** தன் 14 பிள்ளைகளையும் ஒரே பள்ளியில்தான் படிக்கவைத்தார். பாஸ் செய்தால் ஆளுக்கு 100ரூபாய் தருவார்.ஒரு பிள்ளை ஒரு வருடம் பெயிலாகிவிட்டான். இந்த வருடம் எல்லாருக்கும் 100 ரூபாய் கொடுத்தார்.பெயிலானவனுக்கு 200 ரூபாய் கொடுத்தார்.மற்ற எல்லோரும் இது எப்படி சரியாகும் ? எனக்கேட்டார்கள்.சந்தோஷத்தில் இருப்பவர்களுக்கு நாம் என்ன பரிசு கொடுத்தாலும் இது மேலும் சந்தோஷத்தைத் தரும்.ஆனால் சோகமான மனநிலையில் இருப்பவர்களைத் தேற்றுவது கடினம். மேலும் அவர்களைக் காயப்படுத்தாமலாவது இருக்கலாம் அல்லவா ! என்றார் கண்ணதாசன்.

என்ன கணக்கிட்டு அப்படிச் செய்தாரோ ,தெரியவில்லை,ஆனால் , அவரது கணக்குச் சரியாக இருந்தது.பெயிலாகி 200 ரூபாய் பெற்ற இந்த பிள்ளை,இன்று டாக்டராக இருக்கிறார்.

| | | |
|---|---|---|
| மார்ச் | 08 | உலக மகளிர் தினம் |
| மார்ச் | 15 | உலக உபயோகிப்பாளர் தினம் |
| மார்ச் | 19 | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் | 22 | உலக தண்ணீர் தினம் |
| மார்ச் | 27 | உலக வனப்பாதுகாப்பு தினம் |



### தன்னம்பிக்கையை வளருங்கள்

அண்மைக் காலங்களில் பெற்றோர் குழந்தைகளின் உடல் நலம்,நடத்தை மற்றும் பள்ளி வீட்டுப்பாடம் இவற்றின்மீது கவனம் செலுத்துகிறார்கள் என்றாலும் இதைவிட முக்கியமான பொறுப்பினுக்கு முக்கியத்துவம் தரத்தவறிவிடுகிறார்கள்.அதுதான் குழந்தையை தன்னம்பிக்கை உடையவர்களாக வளர்ப்பது! இது ஒன்றும் மந்திரம் இல்லை.குழந்தைகளது பணிகளை நீங்களே வலியச்சென்று ஏற்காதீர்கள்.சில பொதுவான செயல்களைச் செய்வதற்கு தினமும் பயிற்சி தாருங்கள். பொறுப்பினைத் தாருங்கள்.

**1. குழந்தைகளுக்கென நேரத்தை ஒதுக்குங்கள்**

பள்ளியிலிருந்து சோர்வுடன் வரும் குழந்தையிடம் என்ன டெஸ்ட் வைத்தார்கள்?மார்க் எவ்வளவு? யார் முதல் மார்க் வாங்கியது? என்றெல்லாம் கேள்விகள் தொடுக்காதீர்கள். களைப்பு நீங்க ஏதேனும் சாப்பிடக்கொடுத்த பின் பள்ளியில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி கேட்டுத்தெரிந்தொள்ளுங்கள். அவரது நண்பர்கள் யார்? யாருடன் விளையாடுகிறார்கள் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.

**2.உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்**

சிறுசிறு முறைகளில் நீங்கள் காட்டும் அன்பினை உணரச்செய்யுங்கள்.காலைநேரத்தில் எழுவது அவர்களுக்கு சிரமமாகத் தோன்றினால் கடிகாரத்தில அலாரத்தை சற்று முன்கூட்டியே வைத்து முன்னதாக எழுப்பத் துவங்குங்கள்.கடைசி நேரத்தில் அவசரப் படுத்தாதீர்கள். நீங்களும் கோபமடையாதீர்கள். பதட்டமடையாதீர்கள்.

**3.குழந்தையைப் பாராட்டுங்கள்**

குழந்தையை பாராட்டுவதற்குக் காரணம் கண்டறியுங்கள்.ஒவ்வொருவரும் தன்னை கவனிக்க வேண்டுமென்றுதான் விரும்புவார்கள்.உங்கள் வீட்டு உறவினர் ஒருவருக்குத் திருமணம் என்றால் உங்களை கவனிக்கிறார்களா? அழைப்பு வருகிறதா? என எதிர்பார்க்கிறீர்கள் இல்லையா? இதில் குழந்தை விதி விலக்கல்லவே!நேரம் கிடைக்கும் போது பலமுறை பாராட்டுங்கள்.

**4.குழந்தை முக்கியமாக உணரப்படட்டும்**

உங்களது சமுகத்தில் , குடும்பத்தில் அக் குழந்தை முக்கியமென்பதாக உணரச்செய்யுங்கள். குழந்தைக்கு ஏதேனும் பொறுப்பினைத் தேடிக் கொடுங்கள். மேஜை அமைப்பது, உட்காருமிடம்,சாப்பிடும் மேஜை இவற்றை துடைத்து அழகுபடுத்தும் பணியைத் தாருங்கள்.குழந்தை வளர்ந்தவர்களாக ஆகும்போது பெரிய வேலைகளைக் கொடுங்கள்.தவறுகளை பெரிது படுத்தாதீர்கள்.நிறைவுகொள்ளுங்கள்.அவர்களின் சிறு செயல்களையும் சிறப்பாகச் செய்ததாகப் பாராட்டுங்கள்.

**5.தோல்விகளை ஏற்க பயிற்சி அளியுங்கள்**

நாம் ஒவ்வொருவருமே ஏதேனும் ஒரு வகையில் தோல்வியடைகின்றோம்,தவறு செய்கின்றோம் என்பதை குழந்தைகளுக்கு ஒவ்வொரு பெற்றோரும் முக்கியமாக உணர்த்துங்கள்.தோல்வி என்பதோடு உலகம் முடிவடைந்து விடுவதில்லை. அறிவியலார்களின் வாழ்க்கை வரலாற்றை கதையாகக் கூறுங்கள். அவர்கள் தோல்விகளிலிருந்துதான் வெற்றியைக் கண்டார்கள் என்பதை குழந்தைகளுக்கு நன்கு தெளிவுபடுத்துங்கள். மேற்கூறிய இக் குறிப்புகளை மனதில் கொண்டு பெற்றோர் குழந்தைகளை தன்னம்பிக்கை கொண்டவர்களாக உருவாக்கலாமே!

**மூளைக்கு வேலை விடைகள்:** 1)ஒரே ஒரு பந்துதான் போடமுடியும். ஒரு பந்து போட்டதுமே அந்தக்கூடை காலியானகூடை என்ற தன்மையை இழந்துவிடுமே! 2)முட்டையை 51 அடிதூரம் கீழே போடுங்கள் 50 அடிதூரம்வரை அது உடையாமல் இருக்குமல்லவா! 3) அவர்கள் நின்ற வரிசை பாபு , சீனு , மணி ,ராமு.

**விடுகதை விடைகள்;** 1.ஒளி, 2.ஸ்டாம்ப், 3. லைட்போஸ்ட், 4. மெழுகு வர்த்தி, 5. காற்று, 6. கடிகாரம், 7. கோலம் 8.ரோடு 9.கை ரேகை

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/3** செல்வி **C. அனுப்பிரியா**<br>அவிட்டம் 3ம் பாதம்<br>தீத்தரிய<br>பூர்வீகம் : கருவாழக்கரை – மயிலாடுதுறை | **13.7.98**<br>163 cm | B.E. (EEE), | Amshuhu I Tech Solutions Pvt. Ltd., Sholinganallur, Chennai | திரு. R. சந்திரசேகரன்,<br>12A, சேந்தங்குடி,<br>அக்ரஹாரம், பெரிய தெரு,<br>மயிலாடுதுறை<br>Cell: **87782 48421, 94424 19822** |
| **B 2/3** செல்வி **Dr. T. ராஜலெட்சுமி**<br>மூலம்<br>கொலுவுடை<br>பூர்வீகம் : இராஜவல்லிபுரம் | **25.12.2000**<br>162 cm | BSMS (Sidha) | Mano Hospital & Pranav Med Hospital Chennai | திரு. R.A. திருஞானசம்பந்தன்,<br>6/15, நடுத் தெரு,<br>இராஜவல்லிபுரம்,<br>திருநெல்வேலி – 627 359.<br>Cell : **99767 02800, 99443 06839** |
| **B 3/3** செல்வி **A. Swetha**<br>சதயம்<br>பல்லவராய<br>பூர்வீகம் : மணிக்கிராமம், மயிலாடுதுறை<br>விருப்பம் : சென்னையில் பணியில் உள்ள வரன் | **27.1.2001**<br>168 cm | B.Com., M.B.A., | Formerly at IBM Pursuing New Career Rs. 50,000/PM | திரு. வை. அன்பழகன்,<br>மனை எண். 75,<br>சுதர்சன் நகர் விரிவாக்கம்,<br>காஞ்சிபுரம் – 631 501.<br>Cell: **98427 37409** |
| **B 4/3** செல்வி **Dr. B. அனுசுயா**<br>உத்திரம்<br>காளிங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம் (அருகேரி கிராமம்)<br>விருப்பம் : நன்கு படித்து வேலையில் உள்ள வரன். | **13.3.2001**<br>160 cm | B.D.S. | தனியார் மருத்துவமனை | திரு. S. பாலசுப்ரமணியன்,<br>ஆலடி ரோடு, No. 219/8, MGR Nagar,<br>விருத்தாசலம்<br>Cell: **98427 57145, 98651 35416** |
| **B 5/3** செல்வி **வெ. சரண்யா**<br>சதயம்<br>காளிங்கராய<br>பூர்வீகம் : அருகேரி (கடலூர் மாவட்டம்)<br>விருப்பம் : சமமாக படித்து பணியில் உள்ள வரன்<br>(1995 to 98 July) வரையில் பிறந்த வரன் | **10.8.98**<br>157 cm | Ph.D (Physics) | Post Doctoral fellow (SRM University) Chennai Rs. 50,000/PM | திரு. கோ. வெங்கடேசம் பிள்ளை,<br>202/1, மெயின் ரோடு, அருகேரி,<br>கொத்தட்டை அஞ்சல்,<br>திட்டக்குடி தாலுகா,<br>கடலூர் மாவட்டம் – 603 203.<br>Cell : **97860 56161, 94430 80015** |
| **B 6/3** செல்வி **R. புவனேஸ்வரி**<br>புனர்பூசம் – 4<br>நெப்புகுட | **23.6.2001**<br>5.6' | B.E. (Comp) | Schneider Electric, Bengaluru Rs. 9.6Lakhs/PA | திரு. R. இராஜசேகரன்,<br>58, VSR நகர்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 96295 03222, 94427 80650 |
| **B 7/3** செல்வி **N. சௌம்யா**<br>பரணி<br>தூதுவுட<br>பூர்வீகம் : கும்பகோணம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன். | **31.07.94**<br>165 cm | M.Com., | Credit Analyst DBS Bank Chennai Rs. 16Lakhs/PA | திரு. C. Nagarajan,<br>S2, Sri Sai Manasa Flats,<br>98, AV Krishnasamy Street,<br>Janaki Nagar, Valasaravakkam,<br>Chennai - 600 087.<br>Cell: **97909 51801, 88707 11813** |
| **B 8/3** செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram<br>விருப்பம் : Middle / Upper Middle Class Caring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal Medicine M.D., | Sr. Resident Doctor at a Private Medical College, Chennai Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j@yahoo.com |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 9/3** செல்வி **இரா. ஜோதி**<br>மிருகசீரிடம் 3ம் பாதம்<br>காருட<br>பூர்வீகம் : குறிச்சி (சீர்காழி Tk.)<br>விருப்பம் : அரசு/வங்கி/ I.T துறையில் சென்னை, பெங்களூரில் பணிபுரியும் வரன். | **01.10.99**<br>165cm | B.A., MBA | | திரு. B. இராமலிங்கம்<br>79, விஸ்வநாதன் நகர்,<br>காட்டுமன்னார்கோவில் PO & Tk<br>கடலூர் மாவட்டம் – **608 301.**<br>Cell: **73394 08153, 87782 26003** |
| **B 10/3** செல்வி **ரெ. சங்கீதப்பிரியா**<br>மூலம் ஒன்றாம் பாதம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : காவாலகுடி<br>விருப்பம் : நல்ல குணம், நிரந்தர வேலை<br>குறிப்பு : ராகு கேது நிவர்த்தி செய்யப்பட்டது. | **28.12.97**<br>5' - 2" | B.E. (CS) | QA Engineer,<br>Rs. 7 Lakhs/PA | திரு. V. ரெங்கசாமி பிள்ளை,<br>455A, மெயின் ரோடு,<br>காவாலக்குடி PO,<br>ஸ்ரீமுஷ்ணம் TK,<br>கடலூர் – **608 702.**<br>Cell: **96263 03880** |
| **B 11/3** செல்வி. **ஐஸ்வர்யா**<br>விசாகம்<br>விளந்துட<br>பூர்வீகம் : பாங்கல்<br>விருப்பம் : பெங்களூரில் பணிபுரியும் வரன் | **22.01.98**<br>163 cm | B.E. (CSE) | Software Developer Bangalore | திரு. S. Jayakumar,<br>Coimbatore,<br>Cell : **94423 45210** |
| **B 12/3** செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம்பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | **07.05.98**<br>154 cm | B.Tech (CS) | Software Professional EPSILON Bangalore<br>Rs. 12 Lakhs/PA | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 059.<br>Cell : **94447 11045, 99416 20355** |
| **B 13/3** செல்வி **R. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>கொங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன் | **09.09.98**<br>160 cm | M.E.<br>(Ph.D) | Asst. Professor (IT) Rajalakshmi Engineering College, Chennai | திரு. P.G. ராமமூர்த்தி,<br>**55/18**, வள்ளலார் தெரு,<br>பெண்ணாடம் – **606 105.**<br>கடலூர் மாவட்டம்<br>Cell: **99761 77910, 91596 54000** |

## "கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரம்

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 300 |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகள் மட்டும்) | 2000 |
| மணமகள், மணமகன் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கருப்பு வெள்ளை ¼ பக்கம் | 750 |
| கருப்பு வெள்ளை ½ பக்கம் | 1500 |
| கருப்பு வெள்ளை முழு பக்கம் | 3000 |
| கலர் ¼ பக்கம் | 2000 |
| கலர் ½ பக்கம் | 4000 |
| கலர் முழு பக்கம் | 7000 |
| முன் அட்டை உட்புறம் | 8000 |
| பின் அட்டை உட்புறம் | 8000 |
| பின் அட்டை வெளிப்புறம் | 10000 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/3** செல்வன் **S. கண்ணன்**<br>புனர்பூசம் பாதம் – 4<br>காங்கேய<br>பூர்வீகம் : திருச்சிற்றம்பலம், மயிலாடுதுறை<br>விருப்பம் : நல்ல குணமுள்ள படித்த வரன் | **08.04.95**<br>180 cm | M.Tech.<br>(EEE) | State Bank of India<br>Associate<br>(Near<br>Chidhambaram) | திரு. R. சண்முகம்,<br>No.238, காவேரி நகர், 10வது தெரு,<br>புதுக்கோட்டை ரோடு,<br>தஞ்சாவூர் – 613 005.<br>Cell : **94866 34464, 97913 55093** |
| **G 2/3** செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம் 4ஆம் பாதம்<br>முள்ளுட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **21.06.99**<br>172 cm | B.Tech (ECE),<br>M.Tech (NIS) | Network Engineer<br>(RAN) LMJ<br>Innovations Amentum<br>Bengalure | திரு. குமார் (எ) சிவ. சிதம்பரம்,<br>1, பங்களா தெரு,<br>தேவானூர் சாலை,<br>வரிச்சிக்குடி,<br>காரைக்கால் மாவட்டம்<br>Cell : **97873 10010, 91509 16765** |
| **G 3/3** செல்வன் **R. பிரவின்**<br>சுவாதி<br>குழுமுட<br>பூர்வீகம் : நந்திமங்கலம், பூலாமேடு<br>விருப்பம் : பணியில் உள்ள அல்லது இல்லாத ஏற்ற வரன் | **18.12.95**<br>163 cm | B.E. | Software Developer<br>Rs. 9,00,000/PA | திரு. C. RAMESH,<br>66, பள்ளிக்கூடத் தெரு,<br>அம்மாப்பேட்டை,<br>சிதம்பரம் – 608 404.<br>Cell : **98423 03216** |
| **G 4/3** செல்வன் **J. செல்வம்**<br>கேட்டை 4ம் பாதம்<br>தொழுவுட<br>பூர்வீகம் : கோழியூர்<br>குறிப்பு : ராகு, கேது தோஷம் உள்ள வரன்<br>விருப்பம் : Any degree with or without job. | **21.11.98**<br>177 cm | B.E.,<br>(CSE) | Software Engineer<br>Chennai<br>CAMS-Fintech<br>Company<br>Rs. 1.3 Lakh/PM | திரு. S. ஜெயக்குமார்,<br>கோழியூர்<br>Cell : **98949 76373, 87601 91221** |
| **G 5/3** செல்வன் **K. ராகுல் நடராஜன்**<br>உத்திரட்டாதி<br>சாத்தனுட<br>பூர்வீகம் : பெருந்தோட்டம்<br>விருப்பம் : வேலை பார்க்கும் அல்லது வேலைக்குச் செல்ல விருப்பமுள்ள பெண். | **14.10.97**<br>170 cm | B.E. (EEE) | Senior Business<br>Analyst (Signatech<br>Services, Chennai)<br>Rs. 9,00,000/PA | திரு. S. கார்த்திகேயன்,<br>3/18A, திருநகர் காலனி,<br>(SKRS Houses) கருவேப்பம்பட்டி PO,<br>திருச்செங்கோடு – 637 304.<br>Cell : 98429 53655, 86674 55520 |
| **G 6/3** செல்வன் **T. பூமிநாதன்**<br>மூலம் 2ஆம் பாதம்<br>தென்னதரிய<br>பூர்வீகம் : வயலூர், குன்னம் வட்டம் | **09.4.96**<br>5' - 8" | Diploma in<br>Mechanical<br>Engineering | TNSTC ஓட்டுநர்<br>(அரசு பணி)<br>Rs. 6,00,000/PA | திரு. S. திருஞானம், (Late)<br>54, வடக்கு தெரு,<br>வயலூர், குன்னம் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் – 621 716.<br>Cell : **81482 69440, 99437 84991** |
| **G 73** செல்வன் **M. INIYAN**<br>Mirugasreesam<br>Kaaruda | **12.04.97**<br>5' - 7" | MBA in<br>Finance<br>Management | Chola General<br>Insurance Finance<br>& Accounts<br>Rs. 4.2 Lakhs/PA | திருமதி. M. Vijayalakshmi,<br>No. 1231, 3rd Floor, Block 12,<br>NPL Anjali Apartment, 108, MTH Road,<br>Villivakkam, Chennai - 600 049.<br>Cell : **99624 47639, 91718 58499** |
| **G 8/3** செல்வன் **S.R. மணிகண்டன்**<br>சித்திரை 3ம் பாதம்<br>உலகுடை<br>பூர்வீகம் : வீரசிகாமணி | **10.10.99**<br>165 cm | B.E.<br>Mechanic<br>Engieering | Business (General<br>Merchant)<br>Sri Centhil Agencies<br>Rs. 9,00,000/PA | திரு. S. இராமசுப்பிரமணியன்,<br>4, குமரப்பா மேஸ்திரி தெரு,<br>சௌகார்பேட், சென்னை–600001.<br>Cell : **99520 72417, 73058 72417** |
| **G 9/3** செல்வன் **M. கார்த்திகேயன்**<br>உத்திரம்<br>சேதுவராயர்<br>பூர்வீகம் : திருநாரையூர், சிதம்பரம் Tk.<br>காட்டுமன்னார்கோவில் | **17.12.92**<br>160 cm | B.E. (Civil) | Aditi Housing<br>Pvt. Ltd.,<br>Rs. 40,000/PM | திரு. K. முருகேசன்,<br>D-3, 4th Floor, Swornam Appartments,<br>Zone Nagar, Guduvancherry,<br>Chennai - 603 202.<br>Cell : **75300 16309, 99426 16640** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 10/3** செல்வன் **K. நவீன்**<br>திருவாதிரை<br>சாத்தனுட<br>பூர்வீகம் : ஆக்கூர், மயிலாடுதுறை<br>விருப்பம் : பணியில் உள்ள பெண், வங்கி / IT | **24.09.97**<br>185cm | B.E. (Mech)<br>MBA<br>(HR and<br>Finance) | Karur Vysya Bank,<br>Business Executive<br>Teynampet, Chennai<br>Rs. 4.5 Lakhs/PA | திரு. S. கல்யாணசுந்தரம்,<br>**4/67,** சிறப்புலி நாயனார் வீதி,<br>ஆக்கூர் PO, தரங்கம்பாடி TK,<br>மயிலாடுதுறை DT. **– 609 301.**<br>Cell : **94891 86848**<br>E-mail : revranji@gmail.com |
| **G 11/3** செல்வன் **S. ராகுல் (எ) மணிகண்டன்**<br>அனுஷம் 1ம் பாதம்<br>செம்புதரிய<br>பூர்வீகம் : துரைப்பாடி, சிதம்பரம்<br>விருப்பம் : பொருத்தமான வரன் | **09.02.99**<br>175 cm | B.E (EEE),<br>PGDC -<br>Power Planet<br>Engineering | IL & FS<br>Power Plant,<br>Parangipettai,<br>Cuddalore<br>Rs. 4 Lakhs/PA | திரு. R. சபா நாயகம்,<br>**2–B,** ஹாஸ்டல் டைப், வட்டம் **– 12,**<br>நெய்வேலி **– 607 803.**<br>Cell : **94866 58630, 94865 92146** |
| **G 12/3** செல்வன் **S.R. பாலாஜி**<br>ரோகினி<br>முதனுட<br>பூர்வீகம் : கோட்டவம், காட்டுமன்னார்குடி | **30.01.96** | B.Tech.,<br>MBA., | Analyst -<br>Accenture, Chennai<br>Rs. 9 Lakhs/PA | திரு. S. ராமதாஸ்,<br>**17,** காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், இலாசுப்பேட்டை,<br>புதுச்சேரி **– 605 008.**<br>Cell : 94425 80571, 86108 73478 |
| **G 13/3** செல்வன் **இரா. சீதாராமன்**<br>பூரட்டாதி<br>இளமாங்குட<br>பூர்வீகம் : இடைக்கட்டு | **29.09.93**<br>170 cm | D.M.E.<br>(Tool & Die) | Dhanam Infra<br>Chennai<br>Rs. 50,000/PM | திரு. சோ. இராமகிருஷ்ணன் பிள்ளை,<br>லட்சுமி ஸ்டோர்,<br>இடைக்கட்டு, உட்கோட்டை அஞ்சல்,<br>உடையார் பாளையம் வட்டம்,<br>அரியலூர் மாவட்டம் **– 612 905.**<br>Cell : **96298 89261,**<br>**96298 89262** (Whatsapp)<br>Landline : **044 – 4979 2859** |
| **G 14/3** செல்வன் **R. ராகுல்**<br>ரேவதி<br>சாத்தனுட<br>பூர்வீகம் : பெருஞ்சேரி<br>விருப்பம் : படித்து பணியில் உள்ள வரன் | **15.08.95**<br>5' - 10" | B.E.<br>(EEE) | Associate Azentio<br>Chennai<br>Rs. 6 Lakhs / PA | திரு. V. RAJU,<br>388C/2, செட்டி தெரு,<br>சேந்தங்குடி,<br>மயிலாடுதுறை **– 609 001.**<br>Cell : **97865 93037** |
| **G 15/3** செல்வன் **V. ஆதித்யன்**<br>பரணி **– 1**<br>கொத்தனுட<br>பூர்வீகம் : கோழியூர், திட்டக்குடி<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன் | **19.12.99**<br>183 cm<br>. | M.Tech | Technical Executive<br>Saasify Solutions<br>Private (Chennai)<br>Limited | திரு. S. Vaithiyanathan,<br>Plot No. 22, Kalki Street,<br>Guru Enclave Apartments,<br>New Perungalathur, Chennai- 600063.<br>Cell : **99627 00172, 87544 25941** |
| **G 16/3** செல்வன் **S. அருண்குமார்**<br>உத்திராடம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : திருவிசநல்லூர்<br>விருப்பம் : இணையான படிப்பு | **27.7.99**<br>5.6' | B.E.<br>(CSE) | Own TT<br>Start up | திரு. R. சரவணன்,<br>1E, ஸ்ரீ மகாலிங்கம் நகர்,<br>திருவிடைமருதூர் **– 612 104.**<br>Cell : **98947 51355, 73737 32315** |
| **G 17/3** செல்வன் **G. அரவிந்த்**<br>கிருத்திகை<br>ஆலச்சிகுட<br>பூர்வீகம் : கொத்தவாசல்/பெரிய கோட்டகம்<br>விருப்பம் : சமபடிப்பு உள்ள குடும்பபாங்கான, வேலையில் உள்ள / வேலையில் இல்லாத வரன். | **18.8.95**<br>183 cm | B.Tech.<br>(MEC) | Poclain Hydraulias<br>Pvt. Ltd.,<br>Puducherry<br>Senior Engineer | திரு. D. ஞானசேகரன்,<br>85F, பிள்ளையார் கோவில் தெரு,<br>அங்காளம்மன் நகர்,<br>முத்தியால்பேட்டை,<br>புதுச்சேரி **– 605 003.**<br>Cell : **88381 52755, 94863 67447, 88707 38071, 99445 29799** |

## சங்கப் பலகை

**பங்கு பெறுவோர் :** தீபிகா, கௌரி, வசுமதி, ஆண்டாள், மீரா, மீனா, பிரியா, சித்ரா, கோமதி.

**சந்திக்குமிடம் :** இந்திரா நகரில் உள்ள தீபிகாவின் இல்லம். தோழிகள் அனைவரும் மாலை 4.30 மணி அளவில் கூடுகின்றனர்.

தீபிகா : வாங்க ! வாங்க ! நீங்க எல்லாம் எங்கள் வீட்டிற்கு வந்திருப்பது ரொம்ப, ரொம்ப சந்தோஷமாக இருக்கு. ஆரஞ்சு ஜூஸ் குடிச்சிட்டு நம்ம அரட்டையை ஆரம்பிக்கலாம்.

மீரா : பரவாயில்ல. வெயில் ஆரம்பிச்சிடுச்சு! first ஜூஸையே கொடு. ஆண்டாளக்கா மாசி மாத விழாக்களைக் கூறுங்கள்.

ஆண்டாள் : மாசி மாதம் சிவபெருமான் மற்றும் மகாவிஷ்ணு வழிபாட்டுக்கு உகந்த புண்ணிய மாதமாகும். புதிய கலைகளை கற்கவும், புதியதாக எதையும் தொடங்கவும் உத்தமமான மாதம். திருமால் மகாவிஷ்ணுவாக அவதாரம் எடுத்தது மாசி மகத்தில்தான் என்கிறது புராணம்.

மீனா : நாங்கள் சிவனுக்குகந்த மாதம் என்று தான் நினைதுக் கொண்டிருக்கிறோம்.

ஆண்டாள் : இந்த மாசம் வருகிற சங்கடஹர சதுர்த்தி மிக மிக விசேஷமானது. இந்த மாதத்தில்தான் பார்வதி தேவி காளிந்தி நதியில் தாமரை மலரில் வலம்புரிச் சங்காக தோன்றினாள் என்று புராணத்தில் உள்ளது.

மீரா : சிவபெருமான் நடத்திய திருவிளையாடல்கள் பெரிதும் இம் மாதத்தில் தான் நிகழ்ந்துள்ளது என்று படித்துள்ளேன். குலசேகர ஆழ்வார் மாசி மாத புனர்பூச நட்சத்திரத்தில் தான் அவதரித்துள்ளார்.

ஆண்டாள் : ஆமாம்! ஆமாம்! பூசநட்சத்திரத்தில் தான் முருகப் பெருமான் சுவாமிமலையில் தன் தந்தைக்கு பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்துள்ளார். மாசி மாதத்தில் அமாவாசை அன்று அங்காள பரமேஸ்வரி கோவிலில் நடக்கும் மயான கொள்ளை விழா மிகவும் பிரசித்தம்.

சித்ரா : மயானக்கொள்ளை என்றால் என்னக்கா? எங்கு பார்த்தாலும் சுவரொட்டிகள் பார்க்கிறேன்.

ஆண்டாள் : பரமசிவன், பிரம்மனின் ஒரு தலையைக் கொய்ய, அந்த கபாலம் அவர் கையில் ஒட்டிக்கொள்ள, கொடுக்கும் உணவை எல்லாம், அந்த கபாளம் உண்டு விட பரமன் பட்டினியாக சுற்றி வர, பார்வதி தேவி அவரது அண்ணன் திருமாலின் அறிவுறுத்தலின்படி, எடுத்த அவதாரமே அங்காள பரமேஸ்வரி, மேல்மலையனூர் மயானத்திற்குச் சென்று, சுவையான உணவைச் சமைத்து மூன்று கவளங்களாக உருட்டி, ஒவ்வொன்றாக இரண்டு கவளங்களைக் கபாலத்திற்குப் போட, அதன் சுவையில் மயங்கிய அது, தேவி மூன்றாவது கவளத்தைக் கீழே போட கபாலம் பரமனின் கையிலிருந்து கீழே இறங்க, அந்த நொடி அம்மன் விஸ்வரூபம் எடுத்து தனது காலால் கபாலத்தை மிதித்து அழித்தார். இந் நிகழ்வே மயான கொள்ளை என தமிழகத்தின் வட மாவட்டங்களில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் ஊர்வலத்தின் போது காய்கறிகளையும், பழங்களையும் தூக்கி எறிந்த வண்ணம் செல்கின்றனர். இவ்வாறு செய்வதால் குடும்பத்தில் உள்ள வறுமையும், பிணிகளும் நீங்கும் என்பது நம்பிக்கை.

மீரா : Thanks அக்கா! இதுவரை இவ்வளவு detail ஆக எனக்குத் தெரியாது. தங்கம், வெள்ளி விலை தாறுமாறாக ஏறுது. பட்டுப்புடவை, நகை வாங்குவது என்பதே குதிரைக் கொம்பாகி விடும் போல. காஞ்சிபுரம் பட்டு சேலையில் ஜரிகையின் தரம் தங்கம், வெள்ளி விலை ஏற்றம் காரணமாக குறைகிறது. பட்டு சேலை விலை அதிகமாகி விட்டபடியால், விற்பனை மிகவும் மந்தமாகி விட்டதாம். அதனால் ஜரிகையில் சேர்க்கப்படும் தங்கம், வெள்ளியின் அளவை சற்று குறைத்து பட்டு சேலைகளை உற்பத்தி செய்ய கைத்தறி துறை உத்தரவிட்டுள்ளது. ஜரிகையில் தங்கத்தின் அளவு 0.5 லிருந்து 0.4 ஆகவும், வெள்ளி 40% க்கு பதிலாக 30% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

தீபிகா : தற்போது 40% சேலைகளில் தங்கம், வெள்ளி சேர்க்காமல் பித்தளை ஜரிகை மற்றும் ரசாயனம் கலந்த போலி ஜரிகையை உற்பத்தியாளர்கள் பயன்படுத்துகிறார்களாம். அத்தகைய ஜரிகையை சூரத்திலிருந்து கொள்முதல் செய்கின்றனர்.

பிரியா : இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும், சுதந்திர போராட்ட தியாகியுமான 101 வயது உயர்திரு. நல்லக்கண்ணு அவர்கள் பிப்ரவரி 25 ஆம் தேதி காலமானார். இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்த தினத்தன்று பிறந்தவர். ஸ்ரீ வைகுண்டத்தில் பள்ளியில் படித்த போது, பள்ளி ஆசிரியர் மூலம் கம்யூனிஸ்ட் கொள்கையில் ஈர்க்கப்பட்டு 1943–ல் கட்சியில் இணைந்தார். இந்திய சுதந்திரப் போராட்டம், விவசாயிகள் போராட்டம், தீண்டாமை, கனிமவள கொள்கைக்கு எதிரான

போராட்டடங்களில் ஈடுபட்டவர். கட்சி தடைப்பட்ட காலத்தில் ஏழு ஆண்டுகள் சிறைதண்டனை பெற்று, சுதந்திர இந்தியாவில் சிறையிலிருந்து வெளியே வந்தார். அவர் 13 ஆண்டுகள் கட்சியின் செயலராக பதவி வகித்துள்ளார். அவருக்கு கட்சி, அரசு அளித்த பரிசுத் தொகையை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அளித்த பெருந்தகை. உடலையும் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்காக தானம் செய்துள்ளார். படித்ததும் இத்தகைய தலைவரைப் பற்றி கூற வேண்டுமென்றெண்ணி கூறிவிட்டேன்.

கௌரி : நானும் வசுமதியும் சில நாடுகளில் நடந்த தேர்தல் பற்றி சொல்கிறோம். போர்ச்சுக்கல் அதிபர் தேர்தலில் ஜோஸ் செகுரோ வெற்றி பெற்றுள்ளார். இவர் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். கடந்த மாதம் 18–ஆம் தேதி நடந்த தேர்தலில் எதிரணி வேட்பாளரான ஆண்ட்ரே வென்ச்சுரா மற்றும் அண்டோனியோ ஜோஸ் செகுரோ இருவருக்கும் 50% க்கும் அதிகமான ஓட்டுக்கள் கிடைக்காததால், இரண்டாம் சுற்று தேர்தல் பிப்ரவரி முதல் வாரத்தில் நடைபெற்றது. அதில் 66% வாக்குகளைப் பெற்று செகுரோ வென்று அதிபராகி உள்ளார்.

வசுமதி : நான் தாய்லாந்து நாட்டின் தேர்தல் குறித்து சொல்கிறேன். இங்கு நடந்த பொதுத் தேர்தலில் பிரதமர் அனுடின் சார்ன் விராகுல் தலைமையிலான பும்ஜய் தாய் கட்சி மொத்தம் உள்ள 500 தொகுதிகளில் 193 இடங்களில் வென்று, தனிப்பெரும் கடசியாக உள்ளது. முற்போக்கு மக்கள் கட்சி 118 இடங்களையும், முன்னாள் பிரதமர் ஷினவத்ராவின் பியூதாய் கட்சி 74 இடங்களையும், கிளாதம் கட்சி 60 இடங்களையும் பெற்றுள்ளது. பும்ஜய்தாய் கட்சியுடன் கிளாதம் கட்சி இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கிறது. பிரதமராக அனுடின் அவர்களே தொடர உள்ளார்.

வங்கதேச தேர்தலையும் சொல்லிடறேன். அங்கு வங்கதேச தேசியவாத கட்சி (பி.என்.பி) தேர்தலில் அபார வெற்றி பெற்று முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் பிப்ரவரி 17ஆம் தேதி பதவி ஏற்றுள்ளார். முகமது யூனுஸ் தலைமையில் அமைந்த இடைக்கால அரசு சீன சார்புடையதாக இருந்தது மட்டுமன்றி இந்துக்கள் உள்ள சிறுபான்மையோர் மிகவும் துன்புறுத்தப்பட்டனர். நம் இரு நாடுகளுக்கான உறவு பலப்படுத்தப்பட்டு, மக்கள் அமைதியாக வாழ்வார்கள் என நம்புவோம்பா!

கோமதி :நான் படிச்ச இயற்கைச் சீற்றங்களைப் பற்றி சொல்றேன்பா! கிழக்கு ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவின் சுபார் மாகாணத்தில் உள்ள ஹேலிகுப்பி என்ற எரிமலை 10,000 ஆண்டுகளுக்குப் பின் வெடித்து சிதறியது. அதன் சாம்பல் பல மைல்களுக்கும் வானில் பரவியதால் கேரளாவின் கண்ணூரிலிருந்து அபுதாபி புறப்பட்ட இண்டிகோ விமானம் அகமதாபாத் நகருக்கு திரும்பி விடப்பட்டதாம்.

சித்ரா : அமெரிக்காவின் ஹவாய் தீவில் உள்ள 'கிலாவியா' எரிமலை பிப்ரவரி 16–ஆம் தேதி வெடித்து சிதறியது. இந்த எரிமலை ஹவாய் எரிமலைகள் தேசிய பூங்காவிற்குள் அமைந்துள்ளது. இதிலிருந்து வெளியான லாவாக்கள் நீரூற்று போன்று 1000 அடி உயரத்துக்கு சீறிப் பாய்ந்தனவென்றும், இதிலிருந்து வெளிப்பட்ட வெப்பம் மற்றும் சாம்பல் 35,000 அடி வரை எழும்பியதென்றும் செய்திகள் கூறுகின்றன. இதன் ஒளி வெகுதூரம் தெரிந்ததாம். இந்த எரிமலை 2024–ஆம் ஆண்டு டிசம்பர் 23–ஆம் தேதி முதல் வெடிக்க ஆரம்பித்து, அடிக்கடி வெடித்து, பிப்ரவரி 16, 2026–ஆம் ஆண்டு 42 ஆவது முறையாக பெரிய அளவில் வெடித்து சிதறியுள்ளது.

மீனா : நீங்க ரெண்டு பேரும் எரிமலை சொல்லிட்டீங்க! நானும் தீபிகாவும் பனிப்புயல் பற்றி சொல்றோம். அமெரிக்காவில் 'டெவின்' பனிப்புயலால் 1800 விமானங்கள் ரத்து செய்யப்பட்டதாம். ஸ்வீடனில் வீசும் ஜோஹன்னஸ் பனிப்புயலால் அங்கும் பல விமான சேவைகளும், ரயில்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. தற்போது அமெரிக்காவின் வடகிழக்கு பகுதி பாம்சைக்ளோன் என்றழைக்கப்படும் ஒரு தீவிர குளிர்கால புயலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நியூயார்க், நியூஜெர்சி, பாஸ்டன் நகரங்களில் 3 அடி வரை பனிப்பொழிவும், 96 கி.மீ. வேகத்தில் காற்றும் வீசியதில் பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டதுடன் பேருந்து, ரயில் சேவையும் நிறுத்தப்பட்டது. அரசு அந்த மாகாணங்களில் அவசர நிலை பிரகடனம் செய்துள்ளதாம்.

தீபிகா : நீதான் பனிப்புயல் சொல்லிட்டியே! இந்தியாவிலும் ஹிமாச்சல பிரதேஷ் மற்றும் ஜம்மு காஷ்மீரில் பனிப்பொழிவு அதிகமாக உள்ளதால் அடல் சுரங்கப்பாதை மூடப்பட்டுள்ளது. யாத்ரீகர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் கலிபோர்னியாவில் 54 ஆண்டுகளில் இல்லாத கனமழை பெய்து, வெள்ளப்பெருக்குடன் பல இடங்களில் சேறும் ஆறு போல் பாய்ந்ததால், மக்கள் கடும் அவதிக்கு ஆளாகினராம். மடகாஸ்கரில் ஜனவரி 31, பிப்ரவரி 1 ஆம் தேதி 'Fytia' புயல்

அடிக்க, பிப்ரவரி 10 ஆம் தேதி 'Gezani' சைக்ளோன் டொமாசினா பகுதியில் கடந்ததில், 60 பேருக்கு மேல் உயிரிழந்ததுடன், நிறைய வீடுகளும், நிலங்களும் சேதமடைந்துள்ளன. அனைத்து மக்களும் கூடிய விரைவில் நார்மல் நிலைக்கு வர நாம் வேண்டிப்போம்!

மீரா : போதும்பா! வேறே ஏதாவது பேசி கலையலாம்!

ஆஸ்திரேலியாவில் மொனாஷ் பல்கலைக்கழகம், தொடர்ந்து இசையைக் கேட்பதால் வயதான காலத்தில் மறதி ஏற்படும் வாய்ப்பு 30% குறையுது என கண்டு பிடித்துள்ளனர். ஆண்டாளக்கா! நம்ம குழந்தைகளை வாழ்த்துங்கள்.

ஆண்டாள் : குழந்தைகளே! எந்த காரணத்துக்காகவும் காலை உணவை தவிர்க்காதீர்கள். அதை தவிர்ப்பதால் ஞாபக சக்தி, மனநிலை, கவனம் பாதிக்கப்படும். நிதானமாக தேர்வு எழுதும் முன் இரு நிமிடம் தியானம் செய்து பின் எழுத தொடங்குங்கள். தேர்வு எழுதும், எழுதப் போகும் அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் மகளிர் அணியின் அன்பான வாழ்த்துக்கள்! வாழ்க வளமுடன்!

தீபிகா உருளைக்கிழங்கு போண்டா, பிரெடு அல்வா, காபி கொடுத்து உபசரிக்க, அடுத்த மாதம் காந்தி மண்டபத்தில் கூடுவோம் எனக் கூறி கலைகிறார்கள்.

நன்றி ! வணக்கம் !

## வெள்ளடை.... குருக்காவூர்

(சுந்தரர் – சம்பந்தர்)

முன் காலத்தில் சீர்காழியிலிருந்து கரடு முரடான பாதையில் துள்ளலும் உற்சாகத்தோடும் பிஞ்சு பாதங்கள் நடை பயணமாய் செல்ல எங்கு செல்கிறார் ஞானசம்பந்தர். சிறார் அதநத்தில் 'பாடுவார் பசி தீர்ப்பாய். பரவுவார் பிணி களைவாய்' சுந்தரர் பாடும் தேவாரம்.

திருக்குருகாவூர் ஆலயத்தில் கேட்க கையில் சுந்தரர்க்கு "கட்டு சோறு அமுது" எம் இறைவன் தந்த ஆட் கொண்ட ஸ்ரீ வெள்ளடைநாதர் சுவாமி திருக்கோவிலுக்கு வந்தருள்வதை எண்ணி எதிர் எல்லை கொண்டு அழைத்து வர மண்ணும் ஆனந்தம் காண அல்லியும், மல்லிகையும் பூ மாரி பொழிய ஸ்ரீ காவியங்கண்ணியம்மை உடன் ஸ்ரீ வெள்ளடைநாதர் சுவாமியை வணங்கி

சுண்ண வெண் நீறு அணி மார்பில் தோல்
புனைந்து எண்ணரும் பல்கணம் ஏத்த
நின்னு ஆடுவர் என்ற பதிகத்தினை சுந்தரர்
முன் விண்ணப்பம் செய்த அருள் தலம்.

இந் நிகழ்வு ஆண்டுதோறும் தை மாதம் அமாவாசையில் நடைபெறுகிறது. சம்பந்தரை பஞ்சமூர்த்தி சுவாமிகளோடு சுந்தரர் அழைத்து வர நிகழ்வும், நிறைவில் எல்லையில் விடுதல் நிகழ்வும் நடைபெறும்நிகழ்வில்வியக்கத்தக்கநிகழ்வும்உள்ளது. ஆலய தீர்த்தம் பால் கிணறு. இங்கு தை அமாவாசையில் சுந்தரர், சம்பந்தர், பஞ்சமூர்த்திகளுடன் தீர்த்தவாரி நடைபெறும். நிகழ்வின் நிகழ்வானது எப்படி தண்ணீர் பஞ்சம் ஏற்பட இறைவன் அருளால் கங்கையை வழிபட செய்து தண்ணீர் பஞ்சம் போக்கின கிணறு கங்கை வழிபட்ட தலமும் என்று கூறுவர்.

இக் கிணறு அருகில் அஷ்ட தேவதை வைத்து அபிஷேகமும், கிணறுக்கும் அபிஷேகம் செய்யும் போது பால் அபிஷேகம் செய்யும் போது பாலால் கிணறு பொங்குவதும், வெண்மை நிறமாக மாறுபட்டு பொங்குவதால் "பால் கிணறு" என்றும் போற்றப்படுகிறது.

இந் நிகழ்வில் வழிபாட்டில் தீப ஆராதனை செய்யும் போது கருடன் வட்டமிட்டு வழிபடவும் கார் மேக துளி விழவும் செவி மடல் சிலிர்க்க இறைவனுக்கு பிடித்த பஞ்ச வாத்தியம் இசைக்க சங்கு முழங்க சுந்தரர், சம்பந்தர் எம் இறைவன் ஆலயம் செல்ல

உளங்குளிர் தமிழ்மாலை
பக்தர் கட்குரை யாமே என்று

சுந்தரர் பாடிய தலத்தையும் சுந்தரர் காண சென்ற சம்பந்தரையும் ஆண்டுதோறும் நடைபெறும் இந் நிகழ்வில் வழிபாடு செய்து இன்புறலாம். சிவ ஆலய வழிபாட்டில் அல்லி, மல்லிகை பூ கொடுத்து வழிபாடு செய்தால் நோய் பிணியும், பசி பிணியும் தீண்டாது என்பார்கள்.

பாடுவார் பசி தீர்ப்பார்

ஆலயம் : சீர்காழி முதல் திருமுல்லை வாசல் இடையில் வடகால் – தெற்கே 1. கி.மீ.

வெள்ளடை என திருக்குருகாவூர்

– வேளா. சோமசுவாமிநாதன்,
ஆச்சாள்புரம். 9751730940

## மாணிக்கவாசகர் - சிவன்பால் கரைந்த ஆன்மீகக் காதல்

தமிழ் ஆன்மீக இலக்கியத்தின் ஆகாயத்தில் அணையாத நட்சத்திரமாக விளங்குபவர் மாணிக்கவாசகர். அவரது வாழ்க்கை, ஒரு மனிதன் எவ்வாறு இறைவனின் அருளால் மாறுபட்டு, முழுமையான ஆன்மீக ஒளியாக விளங்க முடியும் என்பதற்கு இது ஒரு மெய்சான்றாகும்.

பாண்டிய மன்னரின் அமைச்சராக உயர்ந்த பதவியில் இருந்த அவர், உலக வாழ்க்கையின் செல்வச் செழிப்பை அனுபவித்தாலும், அவரது உள்ளம் அமைதியை அடையவில்லை.

அந்த அமைதியை அவர் கண்டது சிவன் திருவடிகளில் தான். சிவனின் அருள் ஒரு தருணத்தில் அவரது வாழ்வை மாற்றியது. அவர் வாழ்வில் தான் அதிகாரம், புகழ், செல்வம் இவை அனைத்தும் மாயை என உணர்ந்து ஆன்மீகப் பாதையைத் தேர்ந்தெடுத்தார்.

"இறைவனை அடைவதே வாழ்க்கையின் உண்மையான வெற்றி"

மாணிக்கவாசகரின் "திருவாசகம்" வெறும் பாடல் அல்ல; அது உருகும் இதயத்தின் உச்சரிப்பு. ஒவ்வொரு சொற்றொடரிலும் பக்தியின் பனித்துளி மிளிர்கின்றது.

அவர் இறைவனைத் தாய் எனவும், தந்தை எனவும், தோழன் எனவும், காதலன் எனவும் அனுபவித்தார். அந்த அனுபவம் சொற்களை கடந்து ஆன்மாவின் மொழியாகவே மாறியது.

"திருவாகத்திற்கு உருகாதார், ஒருவாசகத்திற்கும் உருகார்"

அவரது பக்தி பயம் சார்ந்ததல்ல; அது காதல் சார்ந்தது. சிவனைத் தேடுவதில் அவர் கொண்ட ஆவல், ஒரு குழந்தை தாயைத் தேடும் அன்பைப் போன்று இருந்தது.

பால்நினைந் தூட்டும் தாயினுஞ்சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

– பிடித்தபத்து
திருவாசகம்

குழந்தை பசித்து அழுவதற்கு முன்னால், ஐயோ, குழந்தைக்கு பசிக்குமே என்று நினைத்து குழந்தை அழு முன்பே பால் தரும் தாயை விட மிகப் பரிந்து, தாய் எப்படி குழந்தை அழுமுன் நினைந்து அதற்கு அமுது அளிக்கிறாலோ, அது போல தாயை விடவும் மேலான அன்புடன், பாவியேனாகிய என், உடலை உருக்கி, உள்ளொளியாகிய ஞானத்தைப் பெருக்கி, அழியாத ஆனந்தமாகிய பேரானந்தத் தேனைச் சொரிந்து, என்னைப் புறத்தேயும் காத்தருளிய அருட்செல்வமே, சிவபெருமானே, நான் உனைத் தொடர்ந்து உறுதியாகப் பற்றிப் பிடித்தேன். நீ இனிமேல் எங்கே எழுந்தருளிச் செல்வது ?!!

அவ்வாறான இறைவனுடன் ஒன்றிய அந்த அனுபவம், அவரை சாதாரண மனிதரிலிருந்து ஆன்மீகச் சிகரமாக உயர்த்தியது.

இன்று கூட கோயில்களில் ஒலிக்கும் திருவாசகப் பாடல்கள், ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் இதயங்களை உருகச் செய்கின்றன.

மாணிக்கவாகர் நமக்கு கற்றுத்தந்த மிகப் பெரிய பாடம் – பக்தி என்பது வெளிப்படையான சடங்கல்ல; அது உள்ளார்ந்த அர்ப்பணிப்பு.

மாணிக்கவாசகரின் வாழ்வு "சிவத்தில் கரைந்த இதயம் எப்போதும் ஒளியாகவே இருக்கும்."

நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம
எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த்
திக்கிக்குஞ் சிவபெருமான்....

சிவ மை. அகிலா,
திருத்துறங்கானைமாடம் (பெண்ணாடம்)
9715698424


## வணக்கமும் வாழ்த்துக்களும்

கார்குலவள்ளல், கலியுக கர்ணன், கல்விக் கடவுள், ஏழை எளியோரின் வாழ்வில் ஒளி ஏற்றும் வள்ளல், பல்துறை வித்தகர் திரு. **வெங்கடேசன் பிள்ளை** அவர்கள் கப்பல் கட்டும் நிறுவனம் அமைப்பதில் பெருமகிழ்ச்சி. மேலும் பற்பல புதிய நிறுவனங்களில் தடம் பதித்து பெருமைகள் பலவும் பெற்றிட எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என்று வேண்டுகிறேன்.

மண்ணை **ப. வீர நாராயணன்**
நெ. 205, 23வது தெரு, கேசவபுரம், நாலூர், மீஞ்சூர், சென்னை – 601 303.

## விட்டலனின் பக்தை - ஸ்ரீ பக்த ஜனாபாய்

விட்டலனின் பக்தர்கள் வரிசையில் முதன் முறையாக ஒரு பக்தையைக் காண உள்ளோம். ஸ்ரீ ஜனாபாய் பூர்வஜென்மத்தில் கண்ணனின் பேரருளைப் பரிபூரணமாக பெற்றவர். கம்ச வதத்தின் போது கண்ணன் மதுராபுரிக்கு எழுந்தருளும் தருணத்தில் கூன் விழுந்த இளமங்கை ஒருத்தி கண்ணனின் விருப்பத்திற்கிணங்க, கம்சனுக்காக எடுத்துச் சென்ற வாசனை மிகும் சந்தனத்தைக் கண்ணன் திருமேனியில் சாத்துவதற்குக் கொடுத்தாள். கண்ணனும் மனம் மகிழ்ந்து அவளின் கூனை நிமிரச் செய்தான். கண்ணனால் ஆட்கொள்ளப்பட்ட அக்கூனிதான் இப் பிறவியில் ஸ்ரீ ஜனாபாயாகப் பிறந்தாள். இப்பிறவியிலும் கண்ணனின் மீது அளவிலா பக்தியுடன் விளங்கினாள்.

எங்கோ பிறந்து வளர்ந்த ஸ்ரீஜனா, ஒரு முறை தனது பெற்றோர்களுடன் பண்டரிபுரம் வந்தாள். அன்று ஏகாதசி தினம். ஆலயத்தில் விடிய விடிய நாம சங்கீர்த்தனம் நடந்து கொண்டிருந்தது. அதில் மூழ்கிய அவள் பெற்றோர்கள் எவ்வளவு வற்புறுத்தியும் அவர்களுடன் செல்ல மறுத்து அடம் பிடித்தாள். அவ்வமயம் பாண்டுரங்கனைச் சேவிக்க வந்திருந்த ஸ்ரீ நாமதேவர் சுவாமிகள் குழந்தை ஜனாவைத் தன் இல்லத்தில் வைத்துக் கொள்வதாக கூறி அழைத்துச் சென்றார். அவர் இல்லத்தில் வளர்ந்து வரும் ஸ்ரீ ஜனா வைகறைத் துயிலெழுந்து, பீமாநதியில் நீராடி, பாண்டுரங்கனையும், ருக்மணி தேவியையும் பக்தியுடன் ஆராதித்து வந்தாள். இனிமையான சாரீரத்தைப் பெற்றிருந்த ஸ்ரீ ஜனாபாய், பக்திரசம் சொட்டும் கிருதிகளைப் புனையும் ஆற்றலையும் பெற்றிருந்தாள். கிருதிகளின் பக்தி சுவையும், அவள் குரலின் இனிமையும் பாண்டுரங்கனுக்கு பேரின்பமாக இருந்தது.

ஸ்ரீ நாமதேவர் நடத்தும் கதாகாலட்ஷேபங்களில் அவருடன் சேர்ந்து பாடுவதுடன், அவரின் பூஜைக்குத் தன்னாலியன்ற திருத்தொண்டுகளைச் செய்து வரலானாள். மங்கை பருவம் அடைந்ததும், அனைத்து வீட்டு வேலைகளையும் தானே செய்யலானாள். ஸ்ரீ ஜனாபாயின் பக்தியை உலகிற்கு உணர்த்த பாண்டுரங்கன் திருவுள்ளம் கொண்டார். ஒரு நாள் ஸ்ரீ நாமதேவரின் தாயார் ஜனாபாயிடம் நிறைய கோதுமையைக்கொடுத்துதிரிக்க கொடுத்தாள். சற்றும் கவலைப்படாமல் திருகுக்கல்லில் கோதுமையைப் போட்டு விட்டல நாமத்தை ஜபித்துக் கொண்டே அரைக்கத் தொடங்கினாள். பாண்டுரங்கன் சிறுவனாக அவளிடம் வந்து, ‘‘ஸ்ரீ ஜனா, என் பெயர் விட்டோபா உனக்காக நான் திருகுக்கல்லைச் சுற்றுகிறேன். நீ எனக்காக பாண்டுரங்கனின் கீர்த்தனைகளைப் பாடு, நான் கேட்டுக் கொண்டே அரைக்கிறேன்’’ என்றான். ஸ்ரீ ஜனாவும் ஸ்ரீமந் நாராயணனின் தசாவதார வைபவங்களைத் தேனினும் இனிய குரலில் பாடலானாள். உள்ளிருந்து கவனித்துக் கொண்டிருந்த நாமதேவரின் தாய் குணாபாய், அவள் யாருடனோ பாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறாள் என எண்ணி, கோலும் கையுமாக கோபத்துடன் வந்து அவளை அடித்தாள்.

பரமன் தன் பொன்மேனி சிலிர்க்க, எனக்கு ஸ்ரீ ஜனாவின் பாடல் மிகவும் பிடிக்கும். அதுதான் அவளுக்கு ஒத்தாசை செய்து கொண்டே பாட்டை ரசித்தேன். பிழை என்னுடையது தான்; என்னை அடியுங்கள் என்றான். அவனைப் பார்த்ததும் அவள் கையிலிருந்த கோல் நழுவியது. குணாவின் கூச்சலைக் கேட்டு ஸ்ரீ நாமதேவர் உள்ளிருந்து ஓடி வந்தார். அவர்கண்களுக்கு பரமனின் தோற்றம் தெரிய, கீழே விழுந்து வணங்கினார். எம்பெருமான் தனது நவரத்ன மணிமாலையையும், பட்டு பீதாம்பரத்தையும் ஜனாபாய் படுக்கையில் போட்டு விட்டு அவளது கந்தல் துணியைத் தரித்து மறைந்தருளினார்.

மறுநாள் திருக்கோவிலில் அர்ச்சகர்கள் எம்பெருமானின் நவரத்ன மணிமாலைகளைக் காணாமல் குழம்பி, அரசனிடம் புகார் அளித்தனர். அரசன் காவலர்களை அனுப்பி ஆபரணங்களைத் தேடுமாறு ஆணையிட்டான். ஸ்ரீ ஜனாபாய் தனது படுக்கையில் ஆபரணங்களும், அங்கியும் இருப்பது கண்டு நாமதேவரிடம் கூற, அவர் தனது திருஷ்டியினால் இறைவனின் திருவுள்ளக் குறிப்பை அறிந்தார். கையும் களவுமாக பிடிப்பட்ட ஜனா, அரசனின் முன்னால் நின்றாள். கழுமரம் ஏற்றிக் கொல்லுமாறு தண்டனை அளித்தான். அவள் கழுமரத்தைப் பார்த்ததும் அது எரிந்து சாம்பலானது. அப்போது வானில் அசரீரி ‘‘எனது பரமபக்தையான ஸ்ரீ ஜனாவின் பக்தியைப் பாரில் உள்ளோர் உணரவே இப்படியொரு திருவிளையாடலைப் புரிந்தோம்’’ என்று கேட்டது. அவளின் கண்களுக்கு மட்டும் இறைவன் தோன்ற பன்முறை நிலத்தில் வீழ்ந்து சேவித்தாள். அவளை ராஜ மரியாதையுடன் அரசர் அழைத்து வரச் செய்து பிழை பொறுக்க வேண்டினான்.

ஸ்ரீ ஜனாபாயும் பாண்டுரங்கன் திருச்சந்நிதியில் அமர்ந்து எம்பெருமானின் லீலா விநோதங்களைப் புகழ்ந்து, கிருதிகளை இயற்றி பாட, பாண்டுரங்கப் பெருமானே ஏட்டிலே எழுதி மகிழ்ந்தார். ஒரு முறை பாண்டுரங்கனைத் தரிசிக்க வந்த ஸ்ரீ ஞானேஸ்வரர்,

ஜனாவின் கீதங்களை எம்பெருமானே ஏட்டிலே எழுதும் அற்புதத்தை ஞான திருஷ்டியால் தெரிந்து கொண்டார். ஸ்ரீ நாமதேவர் இல்லத்திற்கு எழுந்தருளிய ஸ்ரீ ஞானேஸ்வரர், அவரிடம் எம்பெருமானே அவளின் கீதங்களை ஏட்டிலே எழுதுவதைக் கூறினார். அப்போது அசரீரி ஒன்று பிறந்தது.

"ஸ்ரீ நாமதேவர், ஸ்ரீ ஜனாபாய் இவர்களுடைய கீதங்களை யாம் எழுதுவோம்; ஸ்ரீ ஞானேஸ்வரர் இயற்றும் சாகித்யங்களை ஸ்ரீ சக்திதானந்தரும், ஸ்ரீ முக்தாபாயின் பாடல்களை ஸ்ரீ ஞானேஸ்வரரும், ஸ்ரீ பரமானந்தர் பாமாலைகளை ஸ்ரீ விசோகேசரும், ஸ்ரீ கூர்மதாஸரின் கவிதைகளை ஸ்ரீ சுவதேவரும், ஸ்ரீசோகா மேளரின் கிருதிகளை ஸ்ரீ அனந்த பட்டரும் எழுதட்டும் என்றது."

இவ்வாறு பக்திப் பாமாலை தொடுத்து, பரமனைப் பாடி வந்த ஸ்ரீ பக்த ஜனாபாய், இன்றும் அந்த பேரானந்த க்ருதிகளால் நம்முடன் வாழ்ந்து வருகிறாள்.

ஸ்ரீ பக்த ஜனாபாய் திருவடியே சரணம்!

– லலிதா வேலாயுதம்.

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

***அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.***
***என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.***

***- கார்காத்தார் ஒப்புரவு***

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் R. Gowtham Ram |
| படிப்பு | BCA., |
| வேலை | Lumina Datamatics<br>(Quality Engineer) Rs. 5 LPA |
| பிறந்த தேதி | 09.01.1998 |
| உயரம் | 172 cm |
| நட்சத்திரம் | Rohini |
| கோத்திரம் | Manudayan |
| பூர்வீகம் | Papanasam, Thanjavur |
| தகப்பனார் | Rajendran (Late) |
| தாயார் | Kowsalya (Agriculture) |
| முகவரி | 1/234, Vellalar Street,<br>Puthur (PT),<br>Papanasam (TK)<br>Thanjavur (DT) - 614 202.<br>Cell : 81484 79427, 81484 33792 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் வ. வெங்கடேச சங்கர் |
| படிப்பு | B.E. (Mechanical) |
| வேலை | IT Analyst (Test Lead)<br>Tata Consultancy Services<br>Australia, AUD $ 69000 (s. 41 Lakhs) |
| பிறந்த தேதி | 25.08.1995 |
| உயரம் | 5' - 6" |
| நட்சத்திரம் | ஆயில்யம் |
| கோத்திரம் | உலகுடை |
| தகப்பனார் | ச. வள்ளிநாயகம், தமிழ்நாடு அரசு வனத்துறை, களக்காடு - ஓய்வு |
| தாயார் | வ. தங்கம் (இல்லத்தரசி) |
| முகவரி | வ.உ.சி. தெரு,<br>வீரசிகாமணி,<br>சங்கரன் கோவில்,<br>தென்காசி<br>Cell : 90472 20415, 90036 00318 |
| விருப்பம் | பட்டப்படிப்பு முடித்து பணியில் உள்ள வரன். |




| | |
|---|---|
| பெயர் | செல்வன் V. அமிர்தராம் |
| படிப்பு | M.E. (E&I) |
| வேலை | Senior Manager,<br>Schneider Electric Pvt. Ltd., Bangalore,<br>Rs. 26,00,000/PA |
| பிறந்த தேதி | 15.07.1997 |
| உயரம் | 182 cm |
| நட்சத்திரம் | அனுஷம் |
| கோத்திரம் | காளிங்கராய |
| பூர்வீகம் | நமச்சிவாயபுரம் |
| தகப்பனார் | S. வரதராஜன், ஆசிரியர் |
| தாயார் | V. ஆண்டாள், ஆசிரியர்<br>(கிழாய் - காளி) |
| முகவரி | 2/249, அக்ரஹாரம்,<br>காளி அஞ்சல்,<br>மயிலாடுதுறை மாவட்டம்.<br>Cell : 97872 99626 / 97872 99625 |
| விருப்பம் | படித்த நல்ல குணமுள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் SARAVANAN .C |
| படிப்பு | B.E. (CS) |
| வேலை | SIDBI (Customer Support Associate)<br>Chennai |
| பிறந்த தேதி | 07.11.1996 |
| உயரம் | 174 cm |
| நட்சத்திரம் | Uthiram |
| கோத்திரம் | Angaaruda |
| தகப்பனார் | Chandrasekaran .C |
| தாயார் | Mohanambal .C |
| முகவரி | 10, J.S. Nagar, Sengamedu,<br>Sattanathapuram (Post),<br>Sirkali (Taluk),<br>Mayiladuthurai (Dist) - 609 109.<br>Cell : 90479 28095, 79049 20732 |
| விருப்பம் | We are looking for a partner who is working Women, Prederably with any Degree. |



# 15-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
24.4.1951

மறைவு :
4.3.2011

## திரு. எஸ். சண்முகசுந்தரம், ஆசிரியர்

பணியாற்றிய ஆண்டு – 1979 – 2019

அறிவின் ஒளியை ஏந்தி,
எளிய தொடக்கப்பள்ளி மாணவர்களின் மனங்களில்
கல்வியின் விதைகளை விதைத்து,
ஒழுக்கம், மனிதநேயம் மற்றும் நல்லொழுக்கத்தின் பாதையை
காட்டிய அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்.

தன் தொழிலை கடமையாக அல்ல,
ஒரு புனிதப் பொறுப்பாக கருதி,
சமூகத்திற்கு நல்ல குடிமக்களை உருவாக்க
தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

எளிமை, நேர்மை, கருணை மற்றும் சேவை மனப்பான்மை
அவரது வாழ்வின் அடையாளங்களாக இருந்தன.
மாணவர்களும் சமூகமும் நேசித்த
ஒரு சிறந்த மனிதராக அவர் என்றும் நினைவில் நிற்பார்.

அவர் நம்மை விட்டு நீங்கியிருந்தாலும்,
அவர் உருவாக்கிய தலைமுறைகளிலும்
அவர் விதைத்த மதிப்புகளிலும்
அவர் வாழ்ந்துகொண்டே இருப்பார்.
அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

**S. சாந்தி சண்முக சுந்தரம்**
**S. செந்தில் நாதன்**
இளையபெருமாள்நல்லூர்

# ஐந்தாமாண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :
20–01–1933



மறைவு :
25–03–2021

## R. இராமலிங்கம் பிள்ளை

### பெரிய பண்ணை, சித்தர்காடு

மயிலாடுதுறை மாவட்டம், மேமாத்தூர் தெய்வத்திருவாளர்கள் இராமசாமி பிள்ளை, பர்வதவர்த்தினி அவர்களின் இளையமகனும் சித்தர்காடு பெரியபண்ணையாரும், சித்தர்க்காடு, மூவலூர், மாப்படுகை ஆகிய ஊர்களின் முன்னாள் கார்காத்தார் சங்கத்தலைவரும் ஆகிய திரு. ஆர். இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு நாளில் நாங்கள் அன்புடன் நினைவு கூர்ந்து வழிபடுகிறோம்.

**என்றும் எங்கள் மனதில் வாழும் மாமனிதரே!**

**நினைத்துப் போற்றும்**

**மனைவி R. தனலெட்சுமி**

| மகள்கள் | மருமகன்கள் | அண்ணன் மகன்கள் | மருமகள்கள் |
|---|---|---|---|
| S. ஆண்டாள் | முனைவர் S.A. சம்பத்குமார் கும்பகோணம் | G. பாலசுப்பிரமணியன் | B. சுமதி |
| | | G. திருமேனி | T. சுபஸ்ரீ |
| K. மாலா | B. கண்ணன், மேலப்பெரும்பள்ளம் | L.B. நகர், மயிலாடுதுறை. | |

**தெய்வத்திருவாளர்கள் :**

R. மங்களம் – A. இராஜாமணி, கொற்கை.

**இவர்கள் வழி பெயரன்கள் – பெயர்த்திகள்**

R. முத்துக்குமார் – M. தேன்மொழி

R. கோகுலக்கண்ணன் – G. நிவேதா

R. அழகுசுந்தரம்

**மற்றும் பெயரன்கள், பெயர்த்திகள், கொள்ளு பெயரன்கள், கொள்ளு பெயர்த்திகள்.**

பெருமாள் கோவில் தெரு, சித்தர்காடு,
மயிலாடுதுறை மாவட்டம்.
செல் : 9788776225 / 9443677943

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி







தோற்றம் :
24–04–1958

மறைவு :
01–03–2023

தெய்வத்திருமதி **S. திலகம்,** M.A., M.Ed.,
(Rtd. Asistant Registrar - AU - CDM),

எளிமையின் வடிவமாய் வாழ்ந்து
பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்து
இறை வழிபாடு தினம் புரிந்து
இதயம் முழுவதும் அன்பு நிறைந்து
இமைப்பொழுதில் எங்களை விட்டு
பிரிந்தாலும் என்றும் உங்கள்
நினைவுகளோடு

கணவர் T. **கல்யாணராமன்**
மற்றும்
**குடும்பத்தினர்,** சிதம்பரம்.
செல் : 9442866105

# 3-ஆம்
# ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16.04.1946



மறைவு
02.04.2023

மயிலாடுதுறை - பெசன்ட் நகர், ரோஜாத்தெருவில் வசித்துவரும்
**S.கலியபெருமாள்** அவர்களின் துணைவியார்

## திருமதி. K.லலிதா அவர்கள்

நினைவஞ்சலி

**என்றும் நீங்கா நினைவில் வாழும் :**

S.K.**பாரதி** (மகன்)
P.**வைஷ்ணவி** (மருமகள்)
பேரன்கள் :
B.**பார்கவ்**, B.**பிரணவ்**
சென்னை.

"நல்லாசிரியர்"
S.**கலியபெருமாள்** (கணவர்)
தலைமையாசிரியர் (ப நி)
19, பெசன்ட் நகர், ரோஜா தெரு, மயிலாடுதுறை.
: 94868 23271.

திரு, S.S.**விஸ்வநாதன்-ஜெயலெட்சுமி,** சோழம்பேட்டை.
மற்றும் உறவினர்களும்-நண்பர்களும்



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

## 108 Rooms & Suites | 03 Banquet Halls

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




# Thiruvasantham
PURE VEG

## A Traditional South Indian Pure Vegetarian Restaurant

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


MARUTHI®
LET THE SUN
PAY YOUR
EB BILL
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR
ROOFTOP SYSTEM
GET ₹0
ELECTRICITY
BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th March 2026

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

***Amirtham Restaurant – A New Chapter in Comfort & Tradition is Name Santhosham Hall***

**Step into our brand-new, fully air-conditioned dining hall — where tradition meets modern elegance. Experience the joy of dining in a spacious, beautifully designed hall that blends cultural warmth with contemporary comfort.**



***At Santhosham Hall, every detail is crafted to make your meal memorable:***

- ❄️ **Fully Air-Conditioned Ambience for ultimate comfort**
- ❄️ **Authentic Flavors served with care**
- ❄️ **Traditional Touch with banana leaf service**

***Amirtham Restaurant – Where Hospitality Feels Like Home***

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**